


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள், 03ம் நாள் (16-04-2022) நிறைவமதி வெளியீடு +94 21 221 2739

## யோகர் சுவாமிகளின் குருபூசை



11-4-2022 பங்குனி ஆயில்யம் நாண்மீன் அன்று யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளின் குருபூசை தென்னாட்டில் இடம்பெற்றது. யாழ்ப்பாண சித்தர் மரபில் முதன்மையானவர் யோகர் சுவாமிகள் ஆவார்.

# பேரூர் ஆதீனம் மற்றும் தருமை ஆதீன திருநெல்வேலி கட்டளைத் தம்பிரான் யாழ் வருகை



பேரூர் ஆதீன குருமகா சன்னிதானம் தவத்திரு.சாந்தலிங்க மருதாசல அடிகளார் மற்றும் தர்மபுர ஆதீன திருநெல்வேலி கட்டளை விசாரணை திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தென்னாடு சிவமடத்தின் அழைப்பின் பெயரில் யாழ்ப்பாணம் வருகை தந்தார்கள். கடந்த 11ம் திகதி யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் எழுந்தருளியுள்ள அருள்மிகு மங்களநாதர் சுவாமியின், கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்து சிறப்பிக்கவே இவர்கள் இங்கு வருகை தந்தார்கள்.

அத்துடன் சன்னிதானம் அவர்கள் கொக்குவில் அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயில், வண்பண்ணை விசுவேசப் பிள்ளையார் கோயில், காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில், காரைநகர் திக்கரை அருள்மிகு முருகன் திருக்கோயில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எழுந்தருளியிருக்கும் ஞானலிங்கேச்சரர் மற்றும் ஞானவைரவர் திருக்கோயில்கள், பாடல் பெற்ற திருத்தலங்களான திருக்கேதீச்சரம் மற்றும் திருக்கோணேச்சரம் சென்று இறைவனை வழிபட்டனர்.

சைவத்தினையும் தமிழினையும் வளர்க்க கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையினர் பல நடவடிக்கைகளைச் செய்து வருகின்றனர் அந்த வகையில் ஆதீனங்கள் வருகை அதற்கு மேலும் வலுச்சேர்க்கிறது.

இவ்வாறான பல ஆதீனங்கள் இலங்கை மண்ணில் மிளிரவேண்டும், சைவத்தினையும் தமிழையும் வளர்க்க வேண்டும், குறிப்பாக இளம் சமூகத்தினரை இறைவழி ஈர்க்க வேண்டும் என்று எல்லாம் வல்ல ஐம்பூதநாதப் பெருமானை வேண்டி விண்ணப்பம் வைக்கிறோம்.

தர்மபுர ஆதீன திருநெல்வேலி கட்டளை விசாரணை திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் முதல் முறையாக யாழ் வருகை தந்தது குறிப்பிடத்தக்கது.



# மிகவும் சிறப்பாக நடைபெற்ற யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில் குடமுழுக்குப் பெருவிழா





சைவத்தினையும், தமிழினையும் பேணிப் பாதுகாக்கவும், மேன்மையுறச் செய்யவும் எடுத்த விடாமுயற்சியின் விளைவால் தோன்றிய யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையின், நோக்கங்களை மீண்டும் வலுப்படுத்தவும், இளமையிலேயே குழந்தைகளுக்கு சைவ நெறியின் ஆதித் தன்மையையும், தனித்துவத்தினையும், பெருமைகளையும் சிவவழிபாட்டின் ஊடகப் பெற்றுக் கொடுப்பதற்கும், அத்துடன் மாணவர்கள் அறிவுடன் சேர்த்து ஞானத்தினையும் பெற்றிடவும் வேண்டி,

பண்டு நால்வருக்கு அறம் உரைத்த பெருமானும், மகேந்திரமலையில் சொன்ன ஆகமத்தினைத் தோற்றுவித்தவரும், வினைகளை அழித்து நல்வாழ்வினைத் தரவல்ல தனிப்பெரும் கடவுளுமாகிய சிவபெருமானை, திருவாசகத்தில் முப்பத்தியெட்டு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மங்களநாதப் பெருமான் வடிவில் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் எழுந்தருள வைத்து கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இப் புத்தெழில் கோலத்தில் புத்தெழுச்சி பெற்று, அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில் என்ற பெயரில், செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் ஆற்றி மங்களநாதருக்கு கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா, பேரூர் ஆதீன குருமகா சன்னிதானம் தவத்திரு. சாந்தலிங்க மருதாசல அடிகளார் மற்றும் தர்மபுர ஆதீன திருநெல்வேலி கட்டளை விசாரணை திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகளின் மற்றும் இலங்கை தென்கயிலை ஆதீன முதல்வர் அகத்திய சுவாமிகள், நல்லூர் சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகளின் ஆசிகளுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த கோயிலினை யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும் சைவ மாணவர் சபையும், ஒசுத்திரேலியாவில் வசிக்கும் சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்களின் முழுமையான நிதிப் பங்களிப்புடன் கட்டி கொடுத்துள்ளனர். மாணவர்கள் மத்தியில் சிவ வழிபாட்டினை வளர்க்கவும், அவர்கள் தாமாகவே சிவனுக்கு நீர் ஊற்றி, பூ சாற்றி வழிபாடு ஆற்றுவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளதே இதன் சிறப்பு ஆகும்.

# கோயில்-குடிகள்

உலகின் தொன்மைக் குடிகளாகிய தமிழ்ப் பெருமக்களின் வாழ்வியல் திருக்கோயில்களை மையமாய் கொண்டதாகும். கோயிலைத் தழுவிய குடிகள் குடிகளைத் தழுவிய கோயில்கள் என்று சித்தியடைந்த குன்றக்குடி அடிகளார் உரைப்பார்கள்.

கோயில்கள் என்பது வழிபடுகின்ற இடம் மட்டும் இல்லை. மக்கள் குமுகாயத்தை இயக்கும் மையக்கேந்திரம். ஒரு ஊர், நகரின் தலைமைச் செயலகம் திருக்கோயிலாகும். ஆகவேதான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், கோயில் விளங்க குடி விளங்கும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற முதுமொழிகளெல்லாம் தோன்றி வளர்ந்தது.

திருக்கோயில்கள் தொன்மைக் காலம் முதலாக கோட்டம், கோயில், தளி, துறை, அம்பலம் என்று பல்வேறு பெயர்களால் தமிழில் அழைக்கப்படுகிறது. ஊர் என்று சொன்னால் கோயில்கள் இருக்க வேண்டும். மக்களெல்லாம் திருவெண்ணீறு அணிய வேண்டும். பத்திமையோடு பாடிப்பரவ வேண்டும். மலர் பறித்திட்டு, வழிபாடு இயற்ற வேண்டும். விதானங்கள் விடைகொடிகள் ஊரில் இருக்க வேண்டும். வெண்சங்கின் முழக்கம் கேட்க வேண்டும். அப்படியிருந்தால்தான் ஊர், இல்லையென்றால் விலங்குகள் வாழ்கின்ற அடவி-காடு ஆகும் என்று திருநாவுக்கரசர் பெருமான் பாடி பரவுகின்றார்.

**“திருக்கோயிலில்லாத திருவிலூரும்**
**திருவெண்ணீ றணியாத திருவிலூரும்**
**பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்**
**பாங்கினோடு பலதளிக ளில்லாவூரும்**
**விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்**
**விதானமும் வெண்கொடியும் மில்லாவூரும்**
**அருப்போடு மலர்பறித்திட்டுண்ணா வூரும்**
**அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே! “**

- திருநாவுக்கரசர்.

திருக்கோயில்கள் பழந்தமிழரின் மெய்யியல் சார்ந்த வடிவங்களாகும். அதாவது கிழக்குப் பார்த்த கோயில் என்றால், மனிதன் மேற்கில் தலைவைத்துப் படுத்தால் எப்படி அவன் உடல் இருக்குமோ, அப்படி வடிவமைப்பைக் கொண்டவை திருக்கோயில்கள். கருவறை என்பது மனிதனின் தலைப்பகுதி, அர்த்தமண்டபம் கழுத்துப்பகுதி, பெரு மண்டபம் தோற்கள், குறி கொடி மரம், பாதங்கள் அரசகோபுரம ஆகும்.



புலன்கள் ஒடுங்கி இறைவன் திருவடியில் உள்ளம் ஒன்றி அமைதியடைந்து, வாழ்வில் இன்பநிலை எய்த வழிபாட்கின்றவை திருக்கோயில்களாகும். பழந்தமிழில் சோறு என்றால் பிறவாமை, முத்திநிலை, பரமபதம் என்று பொருளாகும். உலகிலேயே இந்திய தமிழகத்தின் சோழ மண்டலத்தில் காவிரிக்கரையில் தான் அதிகமாக திருக்கோயில்கள் அமைந்திருக்கிறது. ஆகவேதான் சோழவளநாடு ‘சோறுடைத்து’ என்று அழைக்கப்பெறுகிறது.

“ஓம்” என்ற குடிலை மந்திரத்தை தந்தது தெய்வத்தழிழ். இம்மந்திரத்தை அளபெடையில் (ஓம்....) நெடிதாக உச்சரித்தால் புலன்கள் ஒடுங்கி மனம் ஒன்றுபடுவதைக் காணமுடியும். இதை நாளும் பன்முறை தமிழ்ச்சான்றோர்கள் மக்களை உச்சரிக்க வைத்தார்கள். இருவர் உரையாடுகின்ற பொழுது, ஒருவர் கருத்து ஏற்புடையதாக இருக்குமென்றால், அப் பொழுது ஓம் என்ற குடிலை மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.

இந்தியத் தமிழகத்தில் நாம் காலப்போக்கில் ஆம் என்று உச்சரிக்கிறோம். அஃது இன்றும் புறச்சமயங்களில் உருமாறி வழங்குகிறது . வடக்கே செல்லச்செல்ல தமிழ் திரியும், தெற்கே செல்லச் செல்ல தமிழ் தெளியும், இன்றைக்கும், ஈழத்தமிழர்கள் யாழ் நகரில் “ஓம்” என்று தெளிவாக உச்சரிப்பதை காண முடியும் என்று திரு. வி.க. அவர்கள் முன்பே கூறியிருக்கிறார்கள்.

உலகின் தொன்மையான மனிதன் வடிவத்தை நான் யாழ்ப்பாணத்தில் காண்கின்றேன் என்று அறிஞர் பெர்னாட்ஸா கூறியிருக்கிறார். திருக்கோயில் என்பது பழந்தமிழ் மக்களின் பண்பாட்டுக் கலை இறையியல் வடிவம், கருவறையில் வணங்கப்பெறும் இலிங்கத் திருமேனி ஆவடையார்-ஆவடையாள், சிவன்-சிவை, சிவ-சத்தி வடிவமாகும். தலைவன்- தலைவி அதாவது மானுடத்தில் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் அடிமையல்ல, இருவரும் வாழ்க்கையில் ஒன்றானவர்கள் என்று காட்டும் உண்மையாகும்.

திருக்கோயிலில் தெற்கு நோக்கியிருக்கும் ஆடல் வல்லான், கூத்தப்பெருமான் திருமேனி அண்டவெளியை இயக்கும் பேராற்றல் வடிவம் என்ற மெய்யியல் கோட்பாடாகும். “அன்பே சிவம்” என்பதே அருந்தமிழர் கண்ட நிலை. திருக்கோயிலில் உச்சரிக்கப்பெறும் ஐந்தெழுத்து மந்திரம் (பஞ்சாட்சரம்) மக்கள் நாவிலேந்திய படைக்கலமாகும்.

அத்தகைய திருக்கோயில்கள் பெருங்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், ஆலக்கோயில், இளங்கோயில், கரகக்கோயில், மணிக்கோயில், துங்கானை மாடக்கோயில், ஈசுவரம் என்ற வகைகளைக் கொண்டு விளங்கி, வழிபடும் மனிதனை பிறவிக்கடலில் இருந்து அகற்றி பிறவாமைப் பெருநெறி என்ற முத்தி நிலையில் கொண்டு போய் சேர்க்கிறது

திருக்குட நன்னீராட்டு விழாவை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் “ கடவுள் மங்கலம்” என்றும், “நீர்த்தெளி” என்றும் அழைத்தார்கள். ஞானசம்பந்தப் பெருமான். “பெருஞ்சாந்திப் பெருவிழா” என்றார்.

**பிறவிப் பெரும்பயன் எய்த கடவுள் மங்கலம் காண்போம்!.**

**திருச்சிற்றம்பலம்**

**மெய்கண்டசிவம் இறைநெறி இமையவன்**
**திருக்குடந்தை தெய்வத்தமிழ்த் திருக்கூடல்**




**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,**
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம்!

காலம் பல புலவர்களை எமக்குத் தந்திருக்கின்றது. அவர்கள் காலங்களை கடந்தும் தம் எழுத்துக்களால் நெடுது வாழ்கின்றனர். இங்கனம் இறவாத புகழோடு இன்றுவரையுள்ள புலவர்களைப் பட்டியல் படுத்தினால், பாரதிக்கு அதில் என்றும் தனியிடம் உண்டு. அவனது எழுத்துக்களுக்கும், கவிதைகளுக்கும் ஓர் சத்தி இருப்பதைப்போல, அவன் பெயருக்கெனவே ஒரு தனி அதிர்வு உண்டு. எதிர்காலத்தையும் அதன் தேவைப்பாடுகளையும் அன்றே கணித்து, பாடியதால் பாரதியை தீர்க்கதரிசனப் புலவன் என்போரும் உளர். புரட்சியையும் புதுமையையும் பழமையின் தனித்துவத்தில் பங்கம் ஏற்பட்டுவிடாது பாடிய ஒப்பற்ற புலவனான பாரதி சொன்ன வரிகள் தான் இந்த ஆசிரியர் பார்வையின் தலைப்பாகவும் அமைகின்றது.

அறிவை வழங்கும் பாடசாலைகளில் எல்லாம், ஆன்மாவை இலயிக்க செய்யும் ஆல யங்களை உருவாக்க வேண்டும் என்பதும். அங்கு முறைப்படி பூசையும் வழிபாடும் நடைபெற வேண்டும் என்பதும் பாரதியின் பெருங்கனவு. எமது சமயம் அறிவியல் சார்ந்தது, நவீன அறிவியல் என்பது நமது ஆன்மீகத்தின் குழந்தை என்பதையும் அறியாதவன் அல்ல பாரதி. இன்று இந்த மண்ணிலும் நின்று நிலைக்கின்ற எத்தனையோ சைவப் பாடசாலைகளில் முறையான வழிபாட்டுக்காக ஆலயங்கள் இல்லாமையைப் பார்க்கின்றோம். இந்த நிலை மாறி பாரதியின் கனவும் மெய்ப்பட, தென்னாடு செந்தமிழாகம சிவமடமும், சைவமாணவர் சபையும், அறம் அறக்கட்டளையும் இணைந்து, சிவ அன்பர்களின் பங்களிப்போடு, ஈழமண்ணில் உள்ள பல பாடசாலைகளில் வழிபாட்டுக்கென சிவலிங்கங்களை அமைத்து, ஞானலிங்க பீடங்களை உருவாக்கி, திருக்குட முழுக்கும் தெய்வத்தமிழில் இயற்றப்பட்டது.

**“அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”** என்ற பாரதி தான்,

ஏழைக்கு எழுத்தறிவித்து, கல்வியின் பயன் என்பது கடவுளைத் தொழுவது என்ற உயர்ந்த கோட்பாட்டை வள்ளுவன்,

**“கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழார் எனின்”**

என்று சொன்னதற்கு ஏற்ப, “பள்ளித்தனைத்தும் கோயில் செய்குவோம்” என்றும் முழங்கினான். ஆனால் இன்று பாடசாலைகளில் எல்லாம் எம்மால் கோயில் அமைத்துவிட முடியுமா? என்ற கேள்வியும் எழுகின்றது. திண்ணைப் பாடசாலைகளாக இருந்து, பிடியரிசி பெற்று சைவப்பிள்ளைகள், ஆங்கிலேய மோகமும், பிற சமய நாட்டமும் கொள்ளக் கூடாதென, வறுமையிலும் செம்மையாக உருவாகியவையே இன்று ஈழத்தில் உள்ள பல பாடசாலைகள். காலத்தின் சுழற்சியால் அவை அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டபோதும், சைவம் மேன்மை கொள்ள வேண்டும், தமிழ் நிலைபெற வேண்டும் என்ற உயர்ந்த உள்ளத்தோடு பணிக்கு வந்த பல அதிபர்கள் தம் சொந்த முயற்சியாலேயே தமது நிர்வாகத்தின் கீழ் இருந்த பாடசாலைகளில் எல்லாம் கோயில்களை உருவாக்கினர், மாணவர்களை வழிபாட்டோடு கூடிய வளமிக்க எதிர்காலத் தலைமுறையாக உருவாக வழிவகுத்தும் போயினர். கொடிய காலம், எமக்கு சில வருந்தத்தக்க மாற்றங்களைத் தந்தது.

சைவத்தின் உட்பொருள் அறியாமல், மேலெழுந்தவாரியாக, சுமார்த்தத்தின் கலப்பையும், ஆரியர்களின் கட்டுகதைகயையும் ‘சைவம்’ என தம் குறை அறிவினால் விளங்கி, இச் சைவம் மூடத்தனமான கருத்துக்களை கொண்டது, அறிவியலுக்கு ஒவ்வாதது என்று பிழையான வாதத்தை முன்வைத்து, ஆலயங்களை அகற்றிவிட்டும், ‘பள்ளித்தலங்கள் செய்வோம்’ என்ற கருத்துடைய பிற்போக்குப் புரட்சியாளர்கள் முளைவிட்டனர்.

ஆயினும், நம் சைவத்தின் தெளிவை உணர்ந்தவர்களும், தமிழின் தெய்வத்தன்மையை விளங்கிக் கொண்டவர்களும், இச் சமயம் அறிவியலின் அடிநாதம் என்று அறிந்த கொடையாளர்களும், இணைந்து ‘தென்னாடு செந்தழிழாகம சிவமடத்தின்’ ஊடாக பல பள்ளித் தலங்கள் தோறும் கோயில் செய்தனர், செய்கின்றனர், செய்வார்கள்!

கடந்த பங்குனித் திங்கள் இருபத்தெட்டாம் நாள் (11.04.2022) அன்று, யாழ். இந்து ஆரம்பபாடசாலையில், பேரூர் ஆதினம், சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், தருமபுர ஆதினம், சீர்மிகு திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் என்போரின் சைவ ஞான எழுச்சியின் இணைவாக, அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தால் திருக்குடமுழுக்கு செய்து வைக்கப்பட்டமை வரலாற்றின் பதிவாகும்.

அன்று கோயில்களை அமைக்க மன்னர்களும், வள்ளல்களும் உதவியதைப் போன்றே, யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின் மங்களநாதர் திருக்கோயில் அமைப்பதற்கும், வன்னிப்பிராந்தியப் பாடசாலைகள் சிலவற்றிலும் திருக்கோயில்கள் அமைக்கவும் பொருள் கொடுத்து, உதவிய சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்களும் அவர் தம் குடும்பமும் காலத்திற்கு உகந்த பெரும் பணியை இன்று செய்தமையால் காலம் தோறும் வாழ்வார்கள் என வாழ்த்துவோம்!

**என்றும் உள்ள தமிழ் வாழ,**
**சைவ நன்னெறி தான் வாழ,**
**நின்று எம் அடியார் பெருமை வாழ,**
**பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்!**
**பாடப்புத்தகத்திலும் அதை வாழ்த்துவோம்!**

**திருச்சிற்றம்பலம்**




**சிவத்திரு.யாழவன் சிவவேதன்,**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
021 222 9722, sivavethan@thennadu.org



# சைவத்தில் பொருளாதாரம்

பணவீக்கம், அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை, இறக்குமதிக்குத் தடை விதிப்பு, பொருட்கள் விலையேற்றம், அத்தியாவசியச் சேவைத் தட்டுப்பாடு என்று எண்ணற்ற வார்த்தைகள் நாள்தோறும் நம் காதுகளில் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. அடித்தட்டு மக்களின் வாழ்க்கை முதற்கொண்டு, மேற்தட்டு மக்களின் வாழ்க்கை வரை ஊசலாடிக்கொண்டிருக்கிறது. இவற்றுக்கான காரணம், அடிப்படை மூலம், இவற்றை வளர்த்தெடுத்த காரணிகள் என்பவற்றை ஒரு ஓரத்தில் வைத்துவிட்டு விடயத்திற்கு வருவோம். பொருளாதாரம் என்ற சொல் பாரிய ஆழம் மிக்கது. ஒரு சமூகம் அல்லது ஒரு குழுமத்தின் அடிப்படை அம்சங்களுள் பொருளாதாரமும் ஒன்று. அதே வகையில் சைவத்தமிழ் மாந்தர் தம் வாழ்வியலிலும் பொருளாதாரம் பின்னிப்பினைந்ததுதான் கிடக்கிறது. ஆயினும் இன்று நிறையப்பேர் சைவம் கூறும் பொருளாதாரத்தை பொருட்படுத்துவதே இல்லை என்பதுதான் மனத்தைப் பற்றி எரிய வைக்கிறது. சைவத்தில் பொருளாதாரமா என்று சிலர் வியப்பாகவும் வாயைப்பிளக்கலாம். ஆனால் உண்மை அதுதான்.

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு**

என்று பொதுமறை சொன்ன வள்ளுவன் இயம்பிப்போன அருளையும், பொருளையும் தமிழ்மறைகள் சொல்லாது போயின என்று கூறினால், அது மூடத்தனம் அன்றி வேறென்ன? இந்த உலகத்திற்குப் பொருளும். அந்த உலகத்திற்கு அருளும் இன்றியமையாதவை என்று இயம்புகிறார் வள்ளுவர். இந்த உலக வாழ்வை நீத்து, அவ்வுலக வாழ்வைப் பெறுவதையே! உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டிருக்கும் திருமுறைகள் அருளைப்பற்றியே பெரும்பான்மையாக பேசுகின்றன என்றால் பிழை இல்லை. ஆனால் திருமுறைகள் அருளைமட்டும் தான் பேசுகின்றன என்றால் அங்கு தான் பிழை இருக்கிறது.

“இம்மையே தரும் சோறுங்கூறையும்” என்று பாடிய சுந்தரரும், “வாசிதீரவே காசு நல்குவீர்” என்று பாடிய திருஞானசம்பந்தரும் பாடத்தெரியாமலா பொருள் பற்றிப்பாடினார்கள். தெரிந்தே, அறிந்தே தான் பாடினார்கள். அதனால் தான் சொல்லுகிறேன் சைவம் பொருளாதாரம் பற்றித் திடமாகச் சொல்கிறது. ஒரு காலத்தில் அரசியல் ரீதியாகப் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்த சமணமும், பௌத்தமும், உலோகாயுதம் போன்ற மதங்கள் தோல்வியடைந்து, அழிந்து போகவும். பிரதான காரணம், அவற்றுக்குச் சைவம் போன்ற விரிவடைந்த நோக்கமோ, தேடலோ இன்மைதான், சமணமும், பௌத்தமும் பெரும்பாலும் துறவையே முதன்மைப்படுத்துவன. துறவை விரும்பாத மக்கள் பற்றிய சிந்தனைகள் அச்சமயங்களில் குறைவாகவே இருந்தன. அத்தனை பேரும் கமண்டலங்களைத் தூக்கிக் கொண்டு காட்டிற்கு புகுந்தால், காடு தாங்குமா என்ற கேள்விக்கு அச்சமயங்களிடம் பதில் இல்லை.

இன்னொரு புறம் உலோகாயுதம் போன்ற சமயங்கள் இன்பமே வாழ்க்கை என்று கிடந்தன. சிற்றின்பமே மெய் என்றால், அதைத்தாண்டியும் வேறு இன்பங்கள் இல்லையா என்ற கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை. ஆனால் சைவமோ விரிந்து, பரந்த அறிவுப்பெரும் நோக்கத்தோடு தன்கருத்துக்களை முன்வைக்கிறது. உனக்கு துறவில் நாட்டம் இருக்கிறதா? நீ துறவுக்கு போ. உனக்கு வாழ்வியலில் நாட்டம் இருக்கிறது எனின் வாழ்வியலில் மனதைச் செலுத்து. உனக்கு எது பிடிக்கிறதோ அதிலே மனதை ஆழ்த்தி அதனுடாக இறைவனைக் காண் என்று அறைகூவல் விடுத்து, சமணம், பௌத்தம் போன்ற கடுநெறிகளுக்கு எதிராகவும், உலோகாயுதம் முதலிய சிறுநெறிகளுக்கு எதிராகவும் தன் திருநெறியின், பெருநெறிக் கதவுகளை திறந்து விடுகிறது சைவம்.

சேக்கிழார் ஒரு காட்சி வரைகிறார். திருஞானசம்பந்தர் இறைவனை வழிபட்டு திரும்பி வருகின்றார். வரும் வழியில் ஒரு சிவனடியார் அழுதவண்ணம் சம்பந்தரிடம் முறையிடுகிறார். இது தான் கதைநிகழும் காட்சி. சரி அவர்கள் கதைக்குள் புகுவோம். “இறைவனுக்காக தான் நாட்டி வளர்த்த பனைகள் ஆண்பனைகளாகி விட்டன. இதனால் அவை காய்க்க வில்லை, என் உழைப்பு போய்விட்டது. ஆண்பனைகள் காய்க்குமா என்று சமணர்கள் என்னை இகழ்கின்றனர்” என்று அழுதுகொண்டு, அந்த அடியவர் சம்பந்தரிடம் முறையிடுகின்றார். சிரித்த வண்ணம் இறைவனின் திருமுன் சென்று பதிகம் பாடுகின்றார் சம்பந்தர். “குரும்பை ஆண்பனை ஈன்குலை ஒத்தூர்” என்று அவர் இறுதிப்பாடலைப் பாடுகின்றபோது, அத்தனை ஆண்பனைகளும் குலை ஈனுகின்றன.

**விருப்பு மேன்மைத் திருக்கடைக்காப்பு**
**அதனில் விமலர் அருளாலே**
**குரும்பை ஆண்பனை ஈனும்**
**என்னும் வாய்மை குலவுதலால்**
**நெருங்கும் ஏற்றுப் பனை எல்லாம்**
**நிறைந்த குலைகளாய் குரும்பை**
**அரும்பு பெண்ணை ஆகிஇடக்**
**கண்டோர் எல்லாம் அதிசயித்தார்**

என்று அக்காட்சியை அழகாகச் சொல்லுகிறார் தொண்டர். சீர் பரவுவார். பனைப்பொருளாதாரத்தின் சிறப்பை பறை சாற்ற இதைவிட வேறேதும் சான்று வேண்டுமா? சம்பந்தரின் அற்புதத்தைச் சொல்லப்புகுந்த சேக்கிழார் தற்சார்புப் பொருளாதாரத்தைப்பற்றி இயம்புகிறார். வாசிதீரக் காசு பெற்று பஞ்சம் போக்கிய, சம்பந்தர் நலன்புரிபொருளாதாரக் கொள்கையைக் காட்டுகிறார்.

நெல்லுமூட்டைகளை வாங்கி ஊர்முழுக்கப் பரப்பி விட்ட, சுந்தரரின் பொருளாதாரம் இறக்குமதிப் பொருளாதாரத்துக்குச் சமாந்தரமாக அமைந்து போகின்றது. நிலவும் இக்கட்டான சூழ்நிலைக்குச் செம்மையாக முகங்கொடுக்க சிறந்தவழி தற்சார்புப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதுதான், சம்பந்தரின் பனை அற்புதம் போல தற்சார்பை உயர்தியதின் பின் குறிப்பிட்ட காலத்துக்கு நலன்புரிகளை மேற்கொண்டால் ஏற்ற இறக்கங்கள் சீராகும். அதன் பின் தற்சார்பை முதன்மைப்படுத்தி உலகச்சந்தையை நோக்கி விரிந்தால் பொருளாதாரம் உயிர்ப்படையும் வாழ்வியல் செம்மையுறும். இத்தனை பொருளாதாரத்தையும் சைவம் சொல்லிச் சென்றும் சடமாக வாழ்கின்றோம். பொருளும், அருளும் சேர்த்து இறைவனை வேண்டி வாழ்வியலில் செம்மையாக இயங்குவோம்.

**திருச்சிற்றம்பலம்**



# நால்வேதங்கள்–அறம், பொருள், இன்பம் வீடு

கண்ணுதற் பெருங்கடவுள் கழகமோடமர்ந்து, பண்ணுறத்தெரிந்தாய்ந்த மொழியல்லலவா இப்பசுந்தமிழ், அதன் வரலாற்றையும் பண்பாட்டுமடலையும், அடித்தளக்கூற்றையும் செப்பனிட்டு ஆராய்ந்து, நோக்குங்கால் தமிழின செஞ்சிறப்பையும், தன்னொப்பு இல்லாத் தன்மையும் ஆய்ந்தறிய இயலும். உலகின் எந்த மொழிக்கும் இல்லாத நெகிழ்வுத் தன்மையும் வன்மைத் தன்மையும் தமிழிடம் ஒருசேர உண்டு. ஏனென்றால் ஈசனே இறங்கிச்செழுமைப்படுத்திய மொழியல்லவா தமிழ்.ஆதலினால் அதன் செம்மையும், சீர்மையும், பெருமையும் வியத்தற்பாலது.

**“நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப”**

என்று தமிழின் இலக்கணத்தை இயம்பிப்போந்த தொல்காப்பியனார் சொல்லுகின்றார். நிறைந்த மொழியுடைய, அதாவது செம்மையான சொற்களை உதிர்க்கும் மாந்தர்களின் அணையிற் கிளர்ந்தவைகளே மந்திரங்கள் என்கிறார் தொல்காப்பியர். சரி அப்படிப்பட்ட நிறைமொழி மாந்தர்களையும், அவர்கள் தம் மறைமொழிகளையும் நோக்குவோம். தமிழர் தம் வரலாற்றியலில் தெளிவாக ஆராய்ந்து, நோக்குங்கால் தமிழிலக்கிய வளர்ச்சிக்காலகட்டத்தை ஆராயலாம். முதல், இடை, கடை எனப் பரந்து விரிந்த மூன்று சங்கங்களிலும் ஏராளமான தமிழ் நூல்கள் யாக்கப்பட்டன என்றும், அவற்றை இறையனாரே இறங்கி வந்து ஆய்ந்தார் என்றும் தமிழிலக்கியம் பேசுகின்றது. ஆனால் அவற்றுள் பல காலத்தாலும், கடற்கோளாலும், கறையான்களாலும் அழிந்தொழிந்து போயின என்பது சான்றோர் முடிபு. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்குமே தமிழர் தம் வேதத்தின் அடிப்படை அம்சங்கள் இந்த நான்கையும் அச்சானியாக்கித் தமிழ் எனும் சக்கரத்தில் ஓடும் மறைகளே தமிழ் மறைகள்.

அத்துடன் மாமறை தந்த நிறைமொழி மாந்தர்களைச் சற்று ஆராய்வோம். இன்றுள்ள தமிழிலக்கியங்களில் ஏராளமானவை பெருஞ்சிறப்பு வாய்ந்தவை. அவற்றுள் தலையாய இலக்கியங்கள் மிகப்பல அவற்றை ஆக்கியமாந்தர்களும் மிகப்பல. தொல்காப்பியர், இறையனார், நக்கீரர், கபிலர் என ஆரம்பித்து திருவள்ளுவர், இளங்கோவடிகள் எனவிரிந்து, அப்பர், சம்பந்தர், மாணிக்க வாசகர் என முதிர்ந்து தற்காலம் பாரதியார் வரை விரிகிறது. பைந்தமிழப் புலவர்களின் எண்ணிக்கை, இவர்கள் யாவரும் புலவர்கள் தாம் அதில் ஐயம் இல்லை, ஆயினும் நிறைமொழி மாந்தர்களா என்ற கேள்வி வருகின்றதல்லவா, அங்கு தான் விடையும் அமைகின்றது. சைவசித்தாந்தம் அத்தகு நிறைமொழி மாந்தர் வாக்கியங்களைப் பதிவாக்கியம் என்று பறைசாற்றிப் போகிறது.

ஆணவம், கன்மம், மாயை போன்ற மலங்களினால் ஆட்பட்டவர்களின் வாக்கு, குறைமொழியாகவே இருக்கும். எவர் அந்த மலங்களால் ஆட்படவில்லையோ, அவர்களின் வாக்கு நிறைமொழி என்று தெளியலாம், சரி, இந்த மலங்களின் ஆளுகைக்கு உட்படாதவர்கள் யார் என்றால், எண்குணம் உடைய இறைவனும், அவனால் அதட்டித்து ஆட்கொள்ளப்பட்ட அவனடியார்களும் மட்டுமே. இத்தகு இரு சாராரினதும் வாக்குகளே மெய்ம்மறைகள், உண்மைவேதங்கள்.

பண்டுநால்வருக்கு அறம், பொருள், இன்பம், வீடு முதலிய மறைகளை உரைப்பதற்காக கல்லால மரத்தின்கீழ் எம்பெருமான் வந்தமர்ந்ததாகப் பல்வேறு இலக்கியங்களும் பேசுகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு என்பனவே, தமிழர் தம் வேதங்கள் இவையே, தமிழரின் வாழ்வினைக் காத்தல் செய்த வழிகாட்டிகள். அன்று ஆலின் கீழமர்ந்து, இறைவன் விரித்துரைத்த மறைகளின் அடிப்படைச்சாறே இவைகள் தாம். அதற்குப் பின்னரும் இறைவனின் வாக்காக அருளாளர்கள், இயம்பிப்போந்த மொழிகளும் செழுந்தமிழ் வேதங்களே. வேதம் என்பது ஓதப்படுவது ஆகமம் என்பது ஒழுங்கு செய்வது, அந்த வகையில் ஆகமங்கள் சட்டம் போன்றன. அத்தகு சிறப்புச் சட்டத்துக்குள் இயங்கும் போது நூல்களே வேதங்கள், தமிழ் என்ற வாழ்வியற் சட்டத்திற்குட்பட்டு இயங்கும் செந்தமிழ் மறைகள் பல உள்ளன. அவற்றுள் ஆதியான மறைகள் நான்கும் என்றும், அந்த நான்கு வேதங்களும் மாதொருபாகனாலே அருளப்பட்டன என்றும். அத்தகு நிறைமொழிகள் கடற்கோள்களாலும், அந்நியப் படையெடுப்புக்களாலும் முறையே அழிந்தும், சிதைந்தும் போயின என்பது தொல்லியல் அறிஞ்ஞர்களின் கூற்று, பஃறுளியாற்றுடன், பன்மலையடுக்கினைக் கொண்ட குமரிக்கோட்டில் ஆதித்தமிழ் வேதங்கள் நிலவின என்றும் அறிஞ்ஞர்கள் இயம்பிப்போகின்றனர். அக் கோட்டினைக் கொடுங்கடல் கொள்ள அவ்வேதங்களும் மறைந்து போயின.

தன்தமிழுக்கு எப்போதெல்லாம் குறையும், இழுக்கும் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் உமையொருபாகத்து அண்ணல் பைந்தமிழைக் காக்க மண்ணில் இறங்குவான், அல்லது அத்தமிழைக் காப்பதற்காக உயர்வடைந்த ஆன்மாக்களை மண்ணில் இறக்குவான். இஃது தமிழன்றி வேறெந்த மொழிக்கும் கிடையாச்சிறப்பு. தான் சொன்ன வேதங்கள் வழக்கிலிருந்து மறைந்த பின்னரும், தன் தமிழைக் காக்கவேண்டிய பொறுப்பு, அந்தத் தன்னோர் இல்லாத் தலைவனுக்கு ஏற்பட்டது. பஃறுளியாற்றுடன் பன்மலைகளைக் கொண்டிருந்த குமரியில் தானே எழுந்தருளி வேதங்களை அருளிய மாமுதல்வன், வடவேங்கடம் முதல் தென்குமரி வரை பரந்த தமிழ் கூறு நல்லுலகிற்கு மீண்டும் அவ்வேதங்களை வழங்குவதற்காக அருளாளர்களைத் திரு அவதாரஞ்செய்வித்தான். இன்று வழக்கில் உள்ள, தமிழ் மறைகள் என்று கூறப்படும் நூல்கள் இரண்டே இரண்டுதான். ஒன்று திருக்குறள், மற்றையது திருமுறை. இது தவிர தென்கலை வைணவர்கள் திவ்வியப் பிரபந்தத்தை தமக்குரிய தமிழ் வேதமாகக் கொள்கின்றனர்

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று துறைகளையும் சிறப்பிக்கும் திருக்குறளின் ஒல்காப்பெருமையை இன்று வரை உலகின் வேறெந்த மொழிகளில் அமைந்த நூல்களாலும் பெற முடியவில்லை. இனியும் பெறமுடியாது என்பதுவே திண்ணம். இதனால் இதன் பெருமை தமிழுக்கும் அப்பால் சென்று உலகப்பொது மறை என்று கூடச்சிறப்பிப்படுகிறது . சைவ சித்தாந்தத்தை கிடக்கைப் பொருளாகப் பேசும் தமிழன் முதல் நூல் என்றும் வள்ளுவத்தைச் சொல்வதில் சற்றும் மிகையில்லை

**“நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்”**

என்று செந்நாப்புலவன் வள்ளுவன் நிறைமொழி மாந்தரின் பெருமையை மறைமொழியாக்கிக் கூறிச்செல்கின்றான்.

தமிழ் வேதங்கள் எள்று சிறப்பிக்கப்படுபவற்றுள் மிகமிக முக்கியமாயது திருமுறையே ஆகும் திருமுறையே கணிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம், திருமுறையே சைவ நெறிக்கருவூலம், திருமுறையே தென்தமிழின் தேன்பாகு. திருமுறையின் பெருமையை சொல்லிக் கொண்டே போகலாம். திருமுறைகளின் பெருமையை பரஞ்சோதியார் தனது திருவிளையாடற் புராணத்தின் ஒரு பாடலில் சொல்லிப்போகின்றார். அம்மம்மா! அதன் அழகில் மனம் ஒருகணம் சிலையாகிவிடும்

**தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்து முதலை<br>உண்டபாலகனை யழித்து மெலும்பு பெண்ணுரவாக்<br>கண்டதும் மறைக் கதவினைத் திறந்துங் கன்னித்<br>தண்ட மிழிச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்**

இந்தப்பாடலொன்றே திருமுறையின் பெருமையை பகர்ந்து போய்விடும்

சைத்தமிழர்களின் உயிர்ச்சொத்தே திருமுறைகள் தான். திருஞானசம்பந்தரின் வாக்கில் முதன் மூன்று திருமுறைகளையும், திருநாவுக்கரசரின் வாக்கில் அடுத்த மூன்று திருமுறைகளையும், சுந்தரரின் வாக்கில் ஏழாவது திருமுறையும் கொண்டுள்ளது சைவத்திருமுறை. மாணிக்க வாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் என்பன எட்டாம் திருமுறையாகவும் சேந்தனார் முதல் ஒன்பது பேர் பாடிய திருமுறை ஒன்பதாவது திருமுறையாகவும், இறையனார் முதல் பல அருளாளர்களால் பாடப்பெற்ற பாடல்கள் பதினொராம் திருமுறையாகவும், சேக்கிழார் அருளிய பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் போற்றப்பட்டது. இது தவிர பத்தாம் திருமுறையான திருமந்திரம் தமிழாகமாகப் போற்றப்படுகின்றது. திருக்குறளும், திருமுறையுமே இன்று வழக்கிலிருக்கும் செந்தமிழ் வேதங்கள்.

இன்று இயல்பில், வழக்கிலிருக்கும் வட வேதங்கள் தொடர்பாகப் பல கருத்துக்கள் நிலவுகின்றன. அவை தானாகத் தோன்றிய சுயம்பு என்று வட மொழியியலாலர்களும், அவை திருமாலால் அருளப்பட்டது. என்று வைணவர்களும், சிவனால் கூறப்பட்டதென்று என்று சைவர்கள் ஒருசாராரும் கூறுகின்றனர். ஏன் பிற்காலச் சமணர்கூட வேதத்தை அருகனே அருளினான் என்று இயம்புகின்றனர். இவ்வாறு காலரீதியாகவும், மொழி ரீதியாகவும், தோற்றரீதியாகவும் வட வேதங்கள் பல சர்ச்சையும் இல்லாமல் சிவனே அருளியது என்று எல்லாச் சமயங்களும் கூறுகின்றன.

**உழக்கும் மறைநாலிலும் உயர்ந்து, உலகம் ஓதும்<br>வழக்கினும், மதிக்கவியினும் மரபின் நாடி<br>நிழல் பொழி கணிச்சி மணி நெற்றி உமிழ்செங்கண்<br>தழல் புரை சுடர்கடவுள் தந்த தமிழ் தந்தான்.**

இந்தப்பாடலைச் சொன்னவர் இராமகாதை சொன்ன கம்ப நாடாழ்வார். ஒரு வைணவக்காப்பியத்தில் சிவன் தந்த தமிழை அகத்தியன் சொன்னான் என்று கம்பர் கூறுகின்றார்.வைணவம் மடடுமல்ல பௌத்த நூலான மணிமேகலை கூட ஈசன் சொன்ன தமிழைத்தந்த அகத்திடனை ‘அமரமுனிவன்’ என்று புகழ்கிறது. இதல்லவா தமிழின் அருஞ்சிறப்பு. ஆதலாலர் உயிரினும் மேலான அமிழ்தினும் இனிய பைந்தழிழால் இறைவனை பாடிப்பரவி வழிபடுவோம் செந்தமிழ்மறைகளை மீட்போம், சைவத்தின் பெருஞ்சிறப்பை உணர்வோம் பிறவிப்பெருங் கடலைக் கடக்க சிவப்பரம்பொருளின் தாள்களை இலக்காகக் கொண்டு உய்வோம்.

**“இறைவன் என்னை நன்றாகப் படைத்தனன்<br>தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே”**

# சீர்பெருகும் செந்தமிழ் குடமுழுக்கு





சிவ.செந்தமிழாதன்
(ஜீவா.ஷஜீவன்)

செந்தமிழ் வரலாறு காலங்களுக்கு முற்பட்டது. கருத்தியல்கள் தோன்ற முன்னரே உலகின் மூத்த முதல் மொழியாய் மட்டும் இல்லாது, தொன்மைக் கலாசாரமாகவும் முகிழ்த்தது. இதன் உட்கூறுகளை ஆராய்ந்தால், இதன் தொன்மை எமக்குத் துலங்கும். தன்னில் இருந்து பிள்ளை மொழிகளைப் பெற்றும், தன்னில் இருந்து பிற கலாசாரக் கோலங்களை கொடுத்தும், இந்த மொழியும் கலாசாரமும் காலத்தால் முதிர்ந்தும், தன் கோலத்தால் இளமை குன்றாமலும் இன்றும் உள்ளது, என்றும் உள்ளது!

நீதி காத்தலும் நெறிமுறை வகுத்தலும், எம் இனத்துக்கு புதியன அல்ல. இலக்கண அமைப்பில் மொழியையே செதுக்கிய எம் குடிகள், தம்மையும் இலக்கணம் அமைத்தே செல்நெறிவகுத்தன! அதன் ஒரு புள்ளியாகவே செந்தமிழ் வழிபாடும், தெய்வக் கோட்பாடும் இணைந்து சிறந்து இருந்தது. 'பண்டு நான்மறை' தமிழ் மறையாகவே விளங்கிற்று, இன்று நாம் கொள்ளும், வடமொழி வேதங்களுக்கு முன்பே, பண்டு நால்வருக்கு அறம் உரைத்தருளிய சிவன் அருள் சிறந்தது, இந்தத் தென்னகத்தில் தான்! அந்த அருள் மொழியாக, இறை மொழியாக தமிழ் மொழி நிறைந்தும் இந்த தென்னகத்தில் தான்.

அங்கனம் துலங்கிய தமிழில் 'ஆகமங்கள்' இல்லை என்றும், அது வழிபட உகந்த மொழி இல்லை என்றும், இடைவந்த வேற்றுமொழி திணிப்பு எம் முன்னவர் பலரின் மூளையை சலவை செய்தது. தமிழன் கட்டிய கோயில்களில் எல்லாம் தமிழில்செ குடமுழுக்கு நிகழாமை - கொடுமை! 'ஆகமம்' 'ஆகமம்' என்று கூறி எம் தமிழை கோயில்களில் இருந்து ஓரம் கட்டினர். அந்த 'ஆகமம்' என்பது தான் என்ன? அப்படி என்னதான் இருக்கிறது? என அறிந்தால் எமக்கு தெளிவும் புரிதலும் ஏற்படும் அதிகமாக எதுவும் இல்லை, ஆகமம் என்றால் தொன்று தொட்டு வரும் அறிவு! நடைமுறை! என்பதே பொருள். அதைக் கொடுத்ததும் ஆதி சிவன் தான்! இன்னும் சுருங்கச் சொல்லப் போனால் ஒரு கோயிலை எப்படி நடாத்துவது? எப்படி பராமரிப்பது? எப்போது பூசை செய்வது? எப்போது திருவிழா? எப்போது, எப்படிக் குடமுழுக்கு செய்வது என்கின்ற நியதிகள் அடங்கிய திரட்டு தான் அது. இது பல வகைப்படும். பல மாறுதல்களுக்கும் உட்படும். 'உலகப் பொதுமறை தந்த தழிழனிடம், ஒற்றை கோயிலை பராமரிக்க விதிமுறை இல்லை' என்று கதை சொல்வது தான் வேடிக்கை.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையோ? அல்லது குறித்த கோயிலைப் பொறுத்து, அதனினும் கூடிய அல்லது குறைந்த ஆண்டுகளுக்கு ஒருமுறையோ செய்யப்படும் குடமுழுக்கு என்பது, கோயிலின் சத்தி வீரியத்தையும், பிரபஞ்ச சத்தியின் இணைப்பையும், கலசங்களின் வாயிலாக ஈர்க்கும் சிறப்பான பெருவிழா ஆகும்! வானுயர நிற்கும் கோபுரங்களும், அவற்றில் சூடப்படும் கலசங்களும் தமிழரின் பிரபஞ்ச அறிவின் உச்சம் என்போம்! பிரபஞ்சத்தில், எம் பால்வீதியில், இந்த கோள் மண்டலத்தின் இயக்கத்திற்கு முழுமுதற் துணையாக உள்ள சூரியனைச் சுற்றிலும் 'ஓம்' என்ற நாமமே இடைவிடாது ஒலிப்பதாக விஞ்ஞானம் ஏற்றுக்கொண்டுள்ளது.

அங்கு! வியாபித்துள்ள ஆற்றலை இங்கு கோயிலில் நாம் பெறவேண்டுமாக இருந்தால், அதே பிரபஞ்ச நாதம் இங்கு ஒலிக்க வேண்டும்! ஒத்த இரு ஒலிகளின் அதிர்வும் மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் சென்று தொடர்புபட்டா லன்றி ஆகாயத்தில் இருந்து கீழான இடைவிடாத சத்தி இறக்கத்தை எம்மால் பெறமுடியாது என்கிற அடிப்படை உண்மையை நாம் உணர்தல் அவசியம். எனவே தான் ஆன்மாலயப்படும் கோயிலில், இந்த பிண்டமாகிய உடலோடு அண்டத்தை இணைத்து ஆற்றல் பெற, செந்தமிழில் திருக்குடமுழுக்கு அத்தியாவசியமாகிறது. ஆகாய ஆற்றலை கோயிலுள்ளே இருக்கும் தெய்வ விக்கிரகங்கள் உள்ளீர்த்து எமக்கு நல்க வேண்டின, அத்திருக் குடமுழுக்கைத் தொடர்ந்தும் செந்தமிழில் அர்ச்சுனை தேவைப்படுகின்றது.

இக்கட்டுரையின் நோக்கம், வடமொழியை இகழ்தல் அல்ல. இறையனாருக்கு மொழி பேதம் கிடையாது. மொழி ஆற்றல் அற்ற, சிலந்தியும் யானையும் முத்தியின்பம் அடைந்த நெறி இச் சைவ நன்னெறி என்பதை நாம் எல்லோரும் உணர்வோம்! ஆக, இக் கட்டுரையின் நோக்கு, அண்டத்தில் ஒலிக்கும் ஆற்றலை அதன் ஒலி மொழியாகிய தமிழால் கோயில்களில் சேமித்து, செந்தமிழ் அர்ச்சுனையால் தேவையான அளவை கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை விளக்குவதே ஆகும்.

இன்னும் ஆழமாக இவ்விடயத்தில் தெளிவும் நம்பிக்கையும் பெறுவதற்கு, இக் கட்டுரையின் வாசகர்கள், விண்வெளி ஆய்வு நிலையங்களால் பதிவுகளை இணையத்தில் தேடி கேட்டுத் தெளிவு பெறலாம் "ஓகாரம்" தமிழிற்கே உரிய தனிச் சிறப்பு. 'ஓம்' என்கிற பிரணவ மந்திரத்திற்கு, வேதங்களை தந்த நான்முகனுக்கே பொருள் தெரியாமல் போனதும்,



செந்தமிழ் குமரன், முருகன் அதற்க்காக நான்முகனை சிறையில் அடைத்ததும், வெறும் புராணம் அல்ல, அது ஆயிரம் அர்த்தங்களை எமக்குச் சொல்லும் நிகழ்வு என்பதை நாம் அறிவோமா?

**மருந்து வேண்டின் இவை மந்திரங்கள் இவை**
**புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை**
**திருந்து தேவன் குடித் தேவர் தேவு எய்திய**
**அருந் தவத்தோர் தொழும் அடிகள் வேடங்களே.**

என்கின்றார் திருஞான சம்பந்தர், மருந்தாகவும், மந்திரமாகவும் தமிழ் மறைகள் விளங்குகின்றன என்று சாட்சியம் தருகின்றார். திருநீற்றையே மருத்தாக்கி, தெய்வத் தமிழையே விருந்தாக்கி, பிரபஞ்ச சத்தியை கருவியாக்கி, மன்னன் நோயைக்குணமாக்கி தனே ஆதாரமாகவும் வரலாற்றில் நிற்கின்றார். கோயிலில் திருமஞ்சனமா? திருநீறே போதும் என்கிறது தமிழ்மறை! எளிமையும், எளிமையினிடத்துப் பெரும் ஆற்றலும் கொண்டது எம் அருமறை! அந்த செந்தமிழ் ஆகமங்கள் எம் தேவாரங்கள், புராணங்கள் என்பது நாம் அறிய வேண்டியது! கோ என்றால் தலைவன். அவன் உறையும் இடமே கோயிலானது. அது மன்னன் வாழ்ந்த இடமாயினும், இறைவன் உறைகின்ற இடமாயினும் கோயிலே அதன் பெயர். வையத்தையே தமிழால் நிர்வகித்த தமிழ் பெரு வேந்தர்களுக்கு தாம் வாழ்ந்த வணங்கிய கோயிலை நிர்வகிப்பதில் என்ன குறைவு வந்துவிடப் போகிறது?

மும்மையில் உலகாண்ட மூர்த்தி நாயனார், தன்னிடம் அரச பணி வந்ததுமே,

**வையம் முறை செய்குவன் ஆயில் வயங்கு நீறே**
**செய்யும் அபிடேகமுமாக செழும் கலன்கள்**
**ஐயன் அடையாளமுமாக அணிந்து தாங்கும்**
**மொய்புன் சடைமுடியே முடியாவது என்றார்,** என்று சேக்கிழார் பதிவு செய்கின்றார்.

ஆகா தமிழ் அரசாட்சிக்கும் புதிய எளிமையான ஆகமம் ஒன்றை வகுத்தது. வள்ளுவன் ஆகச் சிறந்த தத்துவ ஆகமத்தை உலகு முழுமைக்குமான அராசாட்ச்சிக்காக தமிழில் வகுத்தான்! இது உலகத் தாய் மொழி என்பதை முரசறைந்தான். நிற்க.

**பேர் கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்ததால்**
**போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்**
**பார் கொண்ட நாட்டுக்குப் பஞ்சம் ஆம் என்றே**
**சீர் கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே!** என்கின்றார் திருமூலர்.

நக்கீரதேவ நாயனார் பதினோராம் திருமுறையிலே கோபப்பிரசாதத்தில்,

**'ஆரியப் புத்தகப் பேய் கொண்டு புலம்பற்று**
**வட்டனை பேசுவார் மானுடம் போன்று'** என்று சுட்டிக் காட்டுகின்றார். உலகம் முழுமையும் நன்மை பெற, கோயில்களை அமைக்கின்றோம். அவற்றின் உண்மை ஆற்றல் வெளிப்பட வேண்டும் என்கில் தமிழில் குடமுழுக்கினை ஆற்றுவோம்!

**வேத முதல்வன் தலையும் தலையாய வேள்வி தன்னுள்**
**நாதன அவன் எச்சன் நற்றவையும் தக்கனார் தலையும்**
**காதிய தில்லைச் சிற்றம்பலத்தான் கழல் சூழ்ந்து நின்று**
**மாதவர் என்னோ மறைமொழியாலே வழுத்துவதே.**
என்கின்றார் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி

நான்முகன் தலை போனதும், தக்கன் தலை போனதும் அறியாமல் நாமும் இன்று, என்னோ மறைமொழியாலும், ஏவல் மந்திரங்களாலும், எமக்கேதும் பயனில்லா ஆகமங்களாலும், வேதங்களாலும், கோயில்களை குடமுழுக்கு செய்யவதும், அர்ச்சுனை செய்வதும் பெரும் பிழை என்பதை மனதிற்கொள்ளவோம். இடைவந்த வழுக் களைந்து முதல் இருந்து முறை பற்றி அடுத்து வரும் தலைமுறைக்கு அறிவு சொல்ல, அவன் அருள் என்றும் இருக்கும் தமிழ் கடல் நின்று சிறக்கும்!

**'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த**
**மறை மொழி நானே மந்திரம் என்ப'**
-தொல்காப்பியம்

திருச்சிற்றம்பலம்

# யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அருள்மிகு மங்களநாதர் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா

















# யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அருள்மிகு மங்களநாதர் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா












# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு சித்தானைக்குட்டி சுவாமிகள்

(சித்தானைக்குட்டிச் சுவாமிகள் சென்ற திங்கள் தொடர்ச்சி)

சிவனடியார்களே! சித்தானைக் குட்டிச் சுவாமிகளின் வரலாறு பல வாரங்களாகத் தொடர்ந்து வருகிறது. மகான்களின் வரலாறுகளை சுருக்கமாகச் சொல்லி விடமுடியாது அவர்கள் இம்மண்ணில் உலாவிய ஒவ்வொரு கணமும் மிக முக்கியமான தருணங்கள். மகான்களைப் பற்றி மிக கவனமாக படித்து வந்தால் எம் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் அறிந்தும் பெற்றும் சிறந்து வாழலாம்.

சைவத்தில் சாதி பேதம், சைவ சமயத்தில் உள்ள நிறைவும் மகிழ்ச்சியும் பிற மாதங்களில் இல்லை என்ற பல விடயங்களை மகான்களின் வரலாறுகளில் இருந்து அறிந்து உய்வீர்களாக.

### சுவாமிக்கு இலக்கணம்

ஒருமுறை அன்பர் ஒருவர் சுவாமிகளைப் பார்த்து சுவாமி என்ற சொல்லுக்கு இலக்கணம் என்ன என்று கேட்டார். கேட்டவருடைய உள்ளத்தில் சுவாமியைப் பற்றி ஒரு இலக்கணம் இருந்தது. அதனைச் சுவாமி நன்கறிவார். ஒரு புன்முறுவல் பூத்து அருளினார்.

“மனிதருடைய பாவங்களுக்காகப் பாடுபடவும் அப்பாடுகளினால் பாவங்கள் பொடிபடவும் வகை செய்யத் தெரியாத அல்லது முடியாத பேர்வழிகள் உண்மையான சுவாமிகள் ஆகமாட்டார். கடவுளே மனித உருவத்தில் அவதாரஞ் செய்தால் ஒழிய மற்றவர்கள் எத்தனை சித்து ஆடினாலும் சுவாமி என அழைக்கக் கூடாது. சுவாமி எனுஞ்சொல் சுவாமியின்மேல் கொஞ்சம் பற்றுள்ள சகலருக்கும் சூட்டப்படும் ஒரு பொதுச் சொல்லாக இருக்கிறது. சுவாமி என்னும் சொல் ஆண்டவனுக்கும் அவன் அருள் வழிப்பட்டோருக்குமே வழங்கப்பட வேண்டியதொன்றாகும். மற்றையோருக்கு வழங்குவது மகாதவறு மகாபாவம். சாதாரண மனிதன் ஒருவன் அப்பட்டத்தை ஏற்றுக் கொண்டால் சுவாமி என்ற சொல்லின் புனிதத்தைப் பொதுமக்கள் புரிந்து கொள்ள முடியாமல் போய்விடும்.

அவதார புருசர்களுக்கும் ஆண்டவனுக்குமே சுவாமி எனும் பட்டம் தகுதியானதாகும். பரமசிவனுக்கும் குருபரனாகி வந்து பிரணவப் பொருளை உபதேசம் செய்த சிவகுருவாகிய, முருகப் பெருமானுக்கே ‘சுவாமி’ என்ற பட்டம் தகும். அவர் அசுரரை அழித்து தேவர்களைக் காப்பாற்றிய பெருமையுடையவர் அல்லவா? விபூதி, உருத்திராக்கம், காவி ஆகிய மூன்றும் முருகப் பெருமானின் சொந்தச் சொத்து. அதை அணியும் சுவாமிமார் தங்களை அதற்குத் தகுதியாளர்களாக்கிக் கொள்ள வேண்டும்!” இப்படி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தருளினார்கள் சுவாமிகள்.

### நாய்க்குட்டியிடம் பேரன்பு

கனகன் என்றொரு சாது இருந்தார். இவர் கும்புறுப்பிட்டி ஊரைச் சேர்ந்தவர். இவர் அடிக்கடி சுவாமிகளைக் காண வருவார். வரும்போது சுவாமிகளுடைய வேறு சில பத்தர்களையும் அழைத்துக்கொண்டு வருவார். சின்னத்துரை சார்ஜன்ட் அவரது மனைவி இராமசீதா (இராமாசி), பொலிஸ் வேலுப்பிள்ளை, அவரது மனைவி, சொர்ணம் ஆதியோரே கனகன் சாதுவோடு அடிக்கடி

வருபவர்கள். கனகன் சாது ஒரு இல்லறவாசி. இராமாசிக் குப் பிள்ளை குட்டிகள் இல்லை. அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோயில் வீதியில் எடுத்த, ஒரு பெட்டை நாய்க்குட்டியை கனகன் சாது இராமாசிக்கு வழங்கி இருந்தார். அந்த நாய்க்குட்டியை இராமாசி பிள்ளைபோலப் பிரியமாக வளர்த்து வந்தார். இவர்கள் எல்லோரும் ஒருநாள் சுவாமியிடம் வந்தபோது இந்த நாய்க்குட்டியையும் கொண்டு வந்திருந்தார்கள். வந்தவர்கள் 4, 5 நாட்கள் சுவாமிகளுடன் தங்கியிருந்து புறப்பட்டார்கள்.

இவர்கள் புறப்படும்போது நாய் கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டது. அவர்கள் எவ்வளவோ தந்திரங்கள் செய்தும் நாய் அவர்களுடன் போக மறுத்துவிட்டது. “பூர்வீகத் தொடர்புபோலும். நாய் நம்மோடு சொந்தங்கொண்டாட வந்துவிட்டது. நீங்கள் அதனை விட்டுச் செல்லுங்கள்” என்று சுவாமிகள் சொன்னார்கள். சுவாமிகளோடு மக்கள் மாத்திரமல்ல, வாயில்லாப் பிராணிகள் பழகினாலுங்கூட அவற்றால் சுவாமிகளை விட்டுப் பிரிய முடிவதில்லை. சுவாமிகளுடைய உள்ளமும் அன்பு, உருவமும் அன்பு, அவர் சந்நிதியும் அன்பே. சுவாமிகள் அதற்குச் செல்லம்மா என்று பெயர் வைத்து அன்போடு செல்லி என்று அழைப்பார்கள். நாய்ப்பிறவியானாலும் புண்ணியம் செய்தது. ஒரு மகானோடு ஒரு நாளைக்காயினும் வாழ்வதற்கு எத்தனையோ மானிடர்களுக்கு வாய்ப்பதில்லை. ஆனால் இந்த நாய்க்கோ சுவாமிகளோடு உடனுறையும் பாக்கியம் கிடைத்தது.

ஒருமுறை சாது கனகர் சிறிய பிழை ஒன்று புரிந்துவிட்டார். அதற்குத் தண்டனையாகச் சுவாமிகள் வேப்பங்கட்டையால் கனகரின் மண்டையில் அடித்தார். மண்டை உடைந்து விட்டது. இரத்தம் பெருகியும் கனகர் அசையவில்லை. கனகரை அழைத்துத் தனது கட்டிலில் படுக்கச் செய்து தனது வாயிலுள்ள வெற்றிலைத்தாம்பலத்தை காயத்தின் மேல் வைத்தார். அடுத்தநாளே காயம் இருந்த இடம் தெரியாமல் காய்ந்துவிட்டது.



### இராமாசி அம்மையார்

இன்றைக்குச் சரியாக பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் வடலூர் சென்றிருந்தேன். அங்கு அருட்பெருஞ்சோதி நிலையத்தில் அம்மையார் ஒருவரைத் தரிசித்தேன். மௌனமே உருவமாகித் தியானத்தில் நிலைபெற்றிருந்தார்கள். உள்ளொளி முகத்தில் பிரகாசித்தது. தவத்தால் மெலிந்த உடல், யாருடனும் பேசுவதில்லை. அம்மையார் முன்னிலையில் சில நிமிடங்கள் தியானத்தில் அமர்ந்தேன். அம்மையார் சந்நிதியில் இறைமையான அலையொன்று வீசுவதை உணர முடிந்தது.

தம்பி சிலோனில் எந்த ஊர் என்று விசாரித்தார்கள். அம்மையாரின் பேச்சிலிருந்து அம்மையார் சிலோனைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து கொண்டேன். அம்மாவின் பூர்வாச்சிரமத்தை நான் அறியலாமா? என்றேன். தம்பிக்குச் சித்தானைக்குட்டிச் சுவாமிகளைத் தெரியுமோ? என்றார்கள். ஆம் அம்மா. சுவாமிகளை வாழ்க்கையில் ஒரே ஒருமுறை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்ததம்மா. அது இன்றும் உள்ளத்தில் பசுமையாக இருக்கிறதம்மா என்றேன்.

“தம்பி அது ஒரு கடல். சுவாமிகளுடைய அருமை பெருமைகளை இன்னும் சிலோன் மக்கள் சரியாக உணரவில்லை. சுவாமிகளும் தம்மை மற்றவர்களுக்கு உண்மையாகக் காட்டிக்கொள்ளாமலே பல சித்தாடல் புரிகின்றார்.இந்த அடிமையை ஆட்கொண்ட பெருமான் அவர்தான். நான் இங்கிருந்தாலும் அவருடைய சித்தாடலை இங்கே இன்றும் கண்டு கொண்டிருக்கின்றேன்.

சுவாமிகளுடைய சந்திப்பினால் எனக்கு இறைமையான தாகம் எழுந்தது. பூர்வாச்சிரமத்தில் சின்னத்துரை சார்ஜனுக்கு மனைவியாராக இராமசீதா என்ற பெயருடன் வாழ்ந்தேன். சுவாமிகள் அன்பொழுக இராமாசி என்று அழைப்பார்கள். அப்பெயரில் எனக்கே ஒரு இன்பம். அப்பெயரே நிலைத்துவிட்டது. துறவறத்தை மேற்கொள்ள வேண்டுமென உள்ளுணர்வு ஒன்று கூறியது. கணவனாரிடம் நீங்கள் வேறோர் திருமணம் முடித்துச் சந்தோஷமாக இருங்கள், நான் துறவியாகப் போகிறேன் என்றேன். கணவர் என்மேல் உயிராக இருந்தார். அதனால் அவர் சம்மதிக்கவில்லை. எங்களுக்குக் குழந்தை குட்டிகளும் இல்லை.

சுவாமிகளிடம் முறையிட்டேன். இந்தப் பிறவி கடைத்தேற எம்பெருமானே நீர்தான் வழிகாட்ட வேண்டும் என்று இரந்தேன். சுவாமிகள் கனவிலே தோன்றி கைகளை உயர்த்தியபடி அபயம் அளித்தார்கள். மணம் முடித்த நாள் முதலாக என்மீது எவ்வித சந்தேகமும் கொள்ளாத எனது கணவன் திடீரென என்மீது சந்தேகம் கொண்டு வாயில் வந்தபடியெல்லாம் தூற்றி, எனது தாயார் வீட்டிற்குத் துரத்திவிட்டார். குருநாதனை மனதில் தியானித்த வண்ணம் திருகோணமலையில் வசித்த தாயாரிடம் சென்றேன். தாயார் மகிழ்வுடன் வரவேற்றார். நேற்றைக்குச் சுவாமிகள் இங்கு வந்தார். எல்லாம் சொன்னார்.எனக்கும் சிதம்பரம் போக வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. நாளைக்கே புறப்படுவோம் என்றார்.

எல்லாம் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. காரைதீவு எங்கே? திருக்கோணமலை எங்கே? சுவாமிகளுடைய ஆசியை நேற்றைக்குப் பெற்றுக் கொண்டுதானே புறப்பட்டேன். ஆண்டவன் எங்கும் இருப்பவர் அல்லவா? அவனடியார்களுக்கும் அவருடைய வல்லமை இருக்கத்தானே செய்யும்” என்று சொல்லி முடித்தார் இராமாசி அம்மையார்.

### நந்தனார் வீட்டில் சாப்பிடும் பாக்கியம் எல்லார்க்கும் கிடைக்குமா? சைவத்தில் சாதிபேதம் இல்லை.

கந்தப்பன் பரிகாரியார் நந்தனார் வமிசத்தைச் சேர்ந்தவர். அவரது இருப்பிடம் கோளாவில். சுவாமிகள் கோளாவிலுக்குச் சென்றால் கந்தப்பன் வீட்டில்தான் தங்குவார். பெரிய பெரிய சாதிமான்கள் எல்லாரும் சுவாமியைத் தரிசிக்க வருவார்கள். வருகிறவர்கள் எல்லாருக்கும் கந்தப்பன் வீட்டில் பால், தேநீர், இளநீர் எல்லாம் தாராளமாகக் கிடைக்கும். நந்தனார் வமிசத்தில் சாப்பிடுவதற்கு எல்லாருக்கும் கிடைக்குமா? என்று சுவாமிகள் வேடிக்கையாகச் சொல்லுவார்கள்.

சுவாமிகள் கோளாவிலுக்குப் போய் இருந்த சமயம் அவ்வூர் மக்கள் மழை இல்லாது வாடினார்கள். நெல்லெல்லாம் வாடிவிட்டன. மக்கள் அவ்வருட விளைச்சலைப் பற்றி நம்பிக்கை இழந்திருந்தார்கள். ஒருநாள் மாலை கமக்காரர் எல்லாரும் ஒன்றுகூடி வந்து சுவாமிகளிடம் முறையிட்டார்கள்.

அடுத்தநாள் மத்தியானம் வரை சுவாமிகள் வீட்டிற்கு வெளியே வரவில்லை. மத்தியானத்தின் பின் வீட்டிற்கு வெளியேவந்தார்கள். ‘வூறிவூறி’ எனச் சத்தமிட்டுக்கொண்டு வெளியே உலவினார். சிறிது நேரத்தில் மழையும் சோனாவாரியாகப் பொழியத் தொடங்கியது. வயல் முழுவதும் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. சுவாமிகள் கந்தப்பன் வீட்டில் நீண்ட நாட்கள் தங்கிவிட்டார்கள். காரைதீவு செல்ல எண்ணம் கொண்டார். அன்று காலையில் கொழும்பு, காலி முதலிய இடங்களிலிருந்து சுவாமியைத் தரிசிக்கப் பிரபல்யமான சில செட்டிமார் வந்திருந்தனர். வரும்போது கையுறையாகப் பழவர்க்கங்கள், கர்ப்பூரம், சாம்பிராணி முதலிய பொருட்கள் கொண்டு வந்ததோடு பாதகாணிக்கையும் வைத்து வணங்கினர்.

வந்தவர்கள் எல்லோருக்கும் கந்தப்பன் அன்பினோடும் பால், பழம் வழங்கினார். வந்தவர்கள் பால் அருந்தும்போது சுவாமிகள் இது நந்தனாருடைய வீடு பால் அருந்துவீர்களா என்று கேட்டார். ஒரு அன்பர் “இது சுவாமிகளுடைய பிரசாதம். இது கிடைப்பதற்கு நாங்கள் முற்பிறப்பில் என்ன தவம் செய்தோமோ? என்றார். செட்டியார் கொண்டு வந்த பழம், பணம் எல்லாவற்றையுமே சுவாமிகள் கந்தப்பரிடம் விட்டு செட்டியாரின் மோட்டாரில் ஏறிக் காரைதீவு சென்றுவிட்டார். கந்தப்பன் மாதக்கணக்காகச் சுவாமிகளையும் அன்பர்களையும் உபசரித்த கூலியைச் சுவாமிகள் எவ்வளவு நாசூக்காகச் செலுத்தி விட்டுச் சென்றார் என்பதை நினைக்கும்போது உடல் புல்லரிக்கிறது.

### குழந்தை கர்ப்பந்தரிக்கும் முன்பே குழந்தைக்குப் பெயரிட்ட சுவாமிகள்

ஒருநாள் சுவாமிகளுக்கு 5 ரூபாவுக்கு மணிஓடர் வந்திருந்தது. அதனை மாற்றுவதற்காகக் கல்முனைத் தபாற் கந்தோருக்கு எதிர்மன்னசிங்க ஆசிரியர் சென்றிருந்தார். சுவாமிகள் நடுக்கத்தோடு கையொப்பம் இட்டிருந்தபடியால் தபால் அதிபராய் இருந்த சித்திரவேல் அவர்கள் பணத்தைக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். சித்திரவேல் அவர்கள் சுவாமிகளையும் ஆசிரியரையும் நன்கு அறிந்தவர். ஆசிரியர் தாம் மேலொப்பம் போட்டுத் தருவதாகக் கூறியும் தபாலதிபர் மாற்றிக் கொடுக்க மறுத்துவிட்டார். சுவாமிகளிடம் காரணத்தைக் கூறி ஆசிரியர் இன்னொரு ஒப்பம் போட்டுத் தருமாறு கூறினார்.

சுவாமிகள் தெளிவான எழுத்தில் ‘ஆ.சி. சித்தானைக்குட்டி சுவாமி” என்று எழுதிக் கொடுத்தார்கள். இதன்பின்பே தபாலதிபர் மணிஓடரை மாற்றிக் கொடுத்தார்.

சில நாட்கள் சென்றன. தபாலதிபருடைய 2 வயது மகன் திடீரென நோய் கண்டு இறந்துவிட்டான். இத்துன்பத்தை தபாலதிபராலும் மனைவியாலும் தாங்க முடியவில்லை. இவர்கள் துன்பத்தை விசாரிக்க சுவாமிகளே சிலரோடு இவர்கள் இல்லம் சென்றிருந்தார். சுவாமிகள் செல்லும்போது வீட்டில் தபாலதிபர் நடுக்கத்தோடு இருந்தார். அன்று சுவாமிகளின் நடுங்கிய கையொப்பத்திற்குப் பணம் கொடுக்க மறுத்த தபாலதிபர், இன்று தாமே நடுக்கத்திற்கு ஆளாகி இருந்தார்.

“அம்மா, அவன் புண்ணியசாலி, அவனை ஆண்டவன் கெதியில் அழைத்துக் கொண்டார். உங்கள் துன்பத்திற்கிரங்கி மறுபடியும் அவன் உங்களிடம் வருகின்றான். நீங்கள் கர்ப்பவதிதானே?’ என்றார்கள் சுவாமிகள். அம்மையார் மறுத்தார். அவர் கர்ப்பவதியாக இருந்ததை அவரே அறியாது இருந்தார். சுவாமிகள் கூறிய அதே மாதத்தில் அம்மையார் கர்ப்பவதியாகி உரிய காலத்தில் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். சுவாமிகள் தீர்க்கதரிசனம் சொன்ன அதே நாளில் உனக்குப் பெயர் சித்திரவேல், மகனுக்கு கதிர்வேல் என்று பெயரிடுமாறு கூறினார்கள். அவ்வண்ணமே மகனுக்குக் கதிர்வேலு என்று பெயரிட்டு வளர்த்தனர்.

இதன் பின்பு சித்திரவேல் அடிக்கடி சுவாமிகளிடம் வரத் தொடங்கினார். வரும்போதெல்லாம் தனது குடும்பப் பாரத்தைப் பற்றியேதான் பேசுவார். தனக்கு ஒரு வீடுமாத்திரமேதான் உண்டென்றும் மற்றைய பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுக்க பொருள் பண்டமோ காசோ இல்லை என்றும் கவலைப்படுவார்.

ஒருநாள் சுவாமிகள் “டேய் சித்திரவேல் உனக்கு எப்பொழுது பார்த்தாலும் குடும்பக்கவலைதான். உனது மூத்த மகளுக்கு செல்லையா என்றொரு மாப்பிள்ளை வருவான். அவன் வந்தபின் உனது பாரங்களையெல்லாம் அவன் தாங்கிக் கொள்வான்” என்றார். ஒருநாள் திடீரென சித்தாண்டி வேலாயுதன் விதானையாருடைய மூத்த புத்திரன் செல்லத்தம்பி டாக்டரும் மற்றும் சிலரும் கல்முனைத் தபாற் கந்தோருக்கு வந்து, அளவைக்காரத் துரை செல்லையாவை மணம் பேசி விவாகத்தைத் தீவிரமாக நடத்தி வைத்தார்கள்.

(சித்தனைக்குட்டிச் சுவாமி மீண்டும் வருவார்.)

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
தொகுப்பு : சிவத்திரு.வடிவேலு கங்காளன்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று- எம்பிரான் திருஞானசம்பந்தன்!



சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

### முத்துப்பந்தல் பெற்ற முத்தமிழ் வேந்தர்:

திருஞானசம்பந்தர் சிவாலயங்கள் தோறும் சென்று வழிபட்டு வரும் நேரத்தில் திருச்சத்திமுற்றத்தில் வழிபட்ட பின் பட்டீச்சரத்துக்கு வந்தார். அப்போது வெயில் காலமாதலால் சூரியனின் கதிர்கள் சுட்டெரித்தன.

வெயிலின் கொடிய வெப்பத்தை தணிக்க, இத்தலத்து பட்டீசர் பூதகணங்கள் மூலமாய் அழகிய முத்துப்பந்தலை அனுப்பி வைத்தார். ஞானசம்பந்தர் இறைவன் அருளை வியந்து பணிந்து போற்றி முத்துப்பந்தலின் நிழலில் வந்தார். ஞானசம்பந்தர் நடந்து வந்த அழகிய காட்சியை காணவும், திருஞானசம்பந்தர் தன்னை காணவும் பெருமான் நந்தி தேவரை விலகி இருக்க கட்டளையிட்டார். நந்தியும் விலகியது.

ஞானசம்பந்தர் ஊற்றெடுக்கும் அன்பினால் இறைவனை வணங்கி ஆனந்தப்பெருவெள்ளத்தில் “பாடல் மறை” எனத்தொடங்கும் பாமாலையை பாடி தலத்தில் தங்கினார். இந்த நிகழ்ச்சியை நினைவுகூறும் வகையில் ஆண்டு தோறும் ஆனிமாதம் சிறப்பாக ஆனி முத்துப்பந்தல் விழா நடைபெறுகிறது.



### முயலகன் நோய் தீர்த்த முக்கண்ணன் கன்று:

ஆளுடைய பிள்ளையார் மழநாட்டிலே காவேரி வடகரையே சென்று திருப்பாச்சிலாச் சிராமத்துக்குச் சென்றபோதா, அந்நகரத்திலே கொல்லிமழவன், தன்னுடைய மகள் முயலகனென்னும் நோயினால் வருந்துதலைக் கண்டு, கவலையுற்று வேறொரு பரிசினாலும் நீங்காமை கண்டு, அவளைத் திருக்கோயிலினுள்ளே கொண்டுபோய் சுவாமிக்கு முன் இட்டு வைத்தான். ஆளுடையபிள்ளையார் அந்நகரத் திற்குச் எழுந்தருளும் பொழுது,

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் எழுந்தருளி வந்தார் என்று ஊதுகின்ற திருச்சின்னத்தின் ஓசையைக் கேட்டு, கொல்லி மழவன் மகளைவிட்டு விரைந்து சென்று, அந்நகரத்தை மிக அழகாக்கி பிள்ளையாரை எதிர்கொண்டு, முத்துச் சிவிகைக்கு முன்னே அடியற்ற மரம்போல விழுந்தான், அதுகண்டு, பிள்ளையார் “எழுக” என்று அருளிச்செய்ய, கொல்லிமழவன் எழுந்து மனமகிழ்ந்து, தலை மேல் கைகுவித்துக்கொண்டு, பிள்ளையாருடன் சென்றான். பிள்ளையார் திருக்கோயிற் கோபுரத்துக்கு அருகில் வந்தவுடனே. முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, உள்ளே சென்று, வலஞ்செய்து கொண்டு இறைவனிடம் போனார்.

போனபொழுது, அறிவு கெட்டு நிலத்திலே கிடக்கின்ற கன்னியைக்கண்டு, “இஃதென்னை? என்று வினாவ, மழவன் வணங்கி நின்று, அடியேனுடைய மகள்: இவள் முயலகனென்னும் நோயினால் மிக வருந்துகின்றமையால் இவளைச் சுவாமி சன்னிதானத்திலே கொணர்வித்தேன்” என்று விண்ணப்பஞ் செய்தான். திருஞானசம்பந்தப்பிள்ளையார் அதைக்கேட்டு அருள்சுரந்து, அவ்விடத்தில் நின்றே சுவாமியை வணங்கி, அவளுடைய நோயை நீக்கும்பொருட்டு “துணிவளர் திங்கள்” என்றெடுத்து, “மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல்செய்வ தோவிவர் மாண்பே” என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அப்பொழுது அந்தக் கன்னி நோய் நீங்கி, எழுந்து ஒல்கிவந்து, தந்தையின் பக்கத்தை அடைந்தாள். அது கண்ட மழவன் மிகுந்த மகிழ்ச்சி கொண்டு, அவளோடும் பிள்ளையாரை விழுந்து வணங்கினான்.



### நளிர் சுரம் நீக்கிய நற்றமிழ் வேந்தர்:


கொங்கு நாட்டுத் தலங்களுக்கு சென்ற திருஞானசம்பந்தர், முதலில் கொடிமாடச் செங்குன்றூர் தலத்திற்கு சென்று, வெந்த வெண்ணீறு என்று தொடங்கும் பதிகத்தினை பாடி மாதொருபாகனைப் போற்றி வணங்கிய பின்னர், திருநணா (தற்போதைய பெயர் பவானி) தலம் சென்று பதிகம் பாடி இறைவனை வணங்குகின்றார். மாதொரு பாகனின் திருக்கோலம் அவரது மனதினை விட்டு நீங்காது இடம் பெற்றிருந்த தன்மையை, திருநணா தலத்தின் மீது அருளிய பதிகத்தின் ஐந்து பாடல்களில் மாதொருபாகனின் தன்மையை குறிப்பிட்டு இருந்தமையிலிருந்து நாம் உணரலாம். இவ்வாறு மீண்டும் மீண்டும் அந்த கோலத்தை தனது திருநணா பதிகத்தில் குறிப்பிட்ட போதிலும் அவருக்கு மன நிறைவு ஏற்படவில்லை போலும். மீண்டும் கொடிமாடச் செங்குன்றூர் சென்று பெருமானின் மாதொருபாகன் திருக்கோலத்தை காண வேண்டும் என்று விரும்பியவராக அவர், பவானியிலிருந்து கொடிமாடச் செங்குன்றூர் செல்கின்றார். இதனிடையில் மழைக்காலம் முடிவுறவே முன்பனிக்காலம் வந்தது.

பனியினை வெறுக்கும் வண்டினங்கள் வெளியே வருவதை தவிர்க்க, தாமரை மலர்கள் போதிய வெப்பம் இல்லாமையால் கருக, மரகத மணியினை கோத்தது போன்று மெல்லிய அருகம்புல்லின் முனையில் பனித் துளிகள் படிய பனிக்காலம் இருந்தது என்று சேக்கிழார் விவரிக்கின்றார். அனைத்து வகையான உயிரினங்களும் தத்தம் துணையோடு தங்களது இருப்பிடங்களில் ஒடுங்கி இருக்கும் வண்ணம் பனி கடுமையாக இருந்தது என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறுகின்றார். மேலும், பல மக்கள் மஞ்சளும் குங்குமமும் சேர்த்து அரைத்து, நெருப்பிட்டு அதனில் அகில் பொடிகளைத் தூவி நறுமணம் மிகுந்த புகை எழுப்பி, குளிர் காய்ந்தனர். இத்தகைய சூழ்நிலையில் பல நாட்களாக இந்த தலத்தினில் ஞானசம்பந்தரும் அவருடன் சென்ற அடியார்களும் தங்கியிருந்ததால், அடியார்கள் பலருக்கு மலைநாட்டினில் ஏற்படும் குளிர்சுரம் பாதித்து அவர்களை நடுங்க வைத்தது.

அடியார்கள் ஞானசம்பந்தரிடம் சென்று தங்களது துன்பத்தை தெரிவிக்க, ஞானசம்பந்தர் குளிரும் குளிர்சுரமும் மலை நாட்டின் இயல்பு என்று குறிப்பிட்டு எனினும் அந்த இயல்பினால் விளையும் கொடுமைகள் பெருமானின் அடியார்களை சாராமல் இருக்கவேண்டும் என்ற கருத்துடன் இறைவனை வேண்டி, இந்த பதிகம் பாடினார்.

**அந்நிலைமை ஆளுடைய பிள்ளையார்க்கு அவர்கள் எலாம்**
**முன் அறிவித்து இறைஞ்சுதலும் முதல்வனார் அருள் தொழுதே**
**இந்நிலத்தின் இயல்பு எனினும் நமக்கு எய்தப் பெறா என்று**
**சென்னிமதி அணிந்தாரைத் திருப்பதிகம் பாடுவார்**

அந்த பதிகம் தான் அவ்வினைக்கு இவ்வினை என்று தொடங்கும் பதிகம். இறைவனார் உட்கொண்ட நஞ்சினைத் தடுத்து வானவர்க்கும் உலகத்தவர்க்கும் எங்கும் பொங்கிப் பரவிய ஆலகால விடத்தினால் எந்தவிதமான தீங்கும் நேரிடாமல் பாதுகாத்தது நீல நிறமாக மாறிய கழுத்து



என்றும், அந்த நீலகண்டம் அடியார்களுக்கு துன்பம் வாராமல் பாதுகாக்கும் என்ற பொருள் பட இந்த பதிகம் பாடியதாக சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறுகின்றார். மேலும் நீலகண்டத்தின் சிறப்பு கருதி, திரு என்ற அடைமொழியை சேர்த்து திருநீலகண்டம் என்று அழைத்து ஆணையிடுவதாக இந்த பதிகம் அமைந்துள்ளது என்று கூறுகின்றார். இந்த பதிகத்தின் முதல் ஒன்பது பாடல்களும் அடியார்கள் தீவினை தீண்டப்பெறாது திருநீலகண்டம் பாதுகாக்கும் என்று முடிகின்றன.

**அவ்வினைக்கு இவ்வினை என்று எடுத்து ஐயர் அமுது செய்த**
**வெவ்விடம் முன் தடுத்து எம்மிடர் நீக்கிய வெற்றியினால்**
**எவ்விடத்தும் அடியார் இடர் காப்பது கண்டம் என்றே**
**செய்வினை தீண்டா திருநீலகண்டம் எனச் செப்பினார்**

**திருச்சிற்றம்பலம்**

# அருட்கொடையாளி சிவத்திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்களின்
# தொண்டும் வாழ்வும்






“வறியார்க்கொன்று ஈவதே ஈகை” என்னும் வள்ளுவனின் வாக்கிற்கு இணங்க தாயகத்திலும் புலத்திலும் வாழும் வறிய தமிழ் மக்களுக்குத் தேவைப்படும் பல்வேறு உதவிகளை வாரி வழங்கிவரும் திரு. சுப்பிரமணியம் சுபதாசன் அவர்கள் “நாமும் வாழ்ந்து மற்றவரையும் வாழ வைப்போம்” என்ற குறிக்கோளுடன் ஒசுத்திரேலியாவில் சிட்னி மாநகரிலே பென்டில் கில் எனுமிடத்தினில் வாழ்ந்து வருகின்றார். அவருடைய தொண்டு வாழ்க்கையை வெளிக்கொணர்வதன் மூலம் அவரைப் பின்பற்றி மேலும் பல சேவையாளர்கள் உருவாகுவார்கள் என்ற எண்ணத்தில் அவருடைய வாழ்க்கை வரலாறினை வெளிக்கொணர்கிறது தென்னாடு.

திரு.சுபதாசன் அவர்கள் இலங்கையின் வடபுலத்திலே யாழ்ப்பாணத்தில் நீர்வளம், நிலவளம் கொண்ட வனப்பு மிக்க கோண்டாவில் எனும் கிராமத்தில் 1964ம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையிலும் பின்னர் தனது உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

பின்னர் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரம் மற்றும் அமையின்மை காரணமாக பல தமிழர்களைப் போன்றே இவரும் ஒசுத்திரேலியாவிற்கு புலம்பெயர்ந்தார். 2000 ஆம் ஆண்டு ஒசுத்திரேலியாவிற்கு வந்த இவர், தனது தன்னம்பிக்கையை மூலதனமாக்கி சுயதொழில் முயற்சி ஒன்றை தொடங்கினார். கடின உழைப்பினாலும் விடா முயற்சியாலும் தனது தொழிலில் படிப்படியாக முன்னேறிய அவர் தனது தொழில் நிறுவனத்தை ஒரு வெற்றிகரமான நிலைக்கு கொண்டு வந்தார். இன்று அவரது நிறுவனமானது பலருக்கு வேலை வாய்ப்புகளை அளிக்கும் ஒரு நிறுவனமாக திகழ்வதுடன் 150க்கும் மேற்பட்ட ஊழியர்களை தன்னகத்தே கொண்டு இயங்குகின்றது.

புலம்பெயர்ந்த தேசத்திலே தனக்கென்று ஒரு நிலையான இடத்தினைப் பெற்றிருந்தாலும் அவருடைய சிந்தனைகள் அனைத்துமே தாயக மண்ணைப் பற்றியும் அங்கு வாழும் மக்கள் படும் இன்னல்களைப் பற்றியதாகவுமே இருந்தது. இதனால் தன்னால் இயன்ற அளவு மண்ணுக்கும் மக்களுக்கும் சேவை செய்வதென உறுதிபூண்டு செயலாற்றத் தொடங்கினார்.

### தொண்டுப்பணிகள்:

இவர் 2005ம் ஆண்டு சிட்னியிலுள்ள யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் இணைந்து தான் கல்வி கற்ற பாடசாலையின் முன்னேற்றத்துக்கு பணியாற்றத் தொடங்கினார். இவரது தொடர்ச்சியான ஆக்கபூர்வமான பங்களிப்பினால் 2017ம் ஆண்டு இந்தச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பு இவருக்கு கிடைத்தது. தலைமைப் பொறுப்பினை முழுமனதாக ஏற்று அதனை திறம்படச் செய்தார். இவரது தலைமையில் தான் முதன் முதலாக சிட்னி மாநகரிலே அதிட்ட இலாபச் சீட்டிழுப்பு ஒன்று நடத்தப்பட்டு அதன் மூலம் பெருமளவான நிதி சேகரிக்கப்பட்டு ($65,000) தாயகத்திலே வன்னி, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பின்தங்கிய பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களின் விளையாட்டுத்திறனையும் கல்வித்திறனையும் ஊக்குவிப்பதற்காக 252 பாடசாலைகளுக்கு 2 கோடி பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. தனது பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய பின்தங்கிய பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களும் முன்னேறவேண்டும் என்ற இவரது பரந்த மனப்பான்மை அந்த நேரத்தில் பலராலும் வியந்து போற்றப்பட்டது.

இவரது தலைமைக்கலாம் ஒரு வருடத்துடன் முடிவடைந்தாலும் தாயகத்திலுள்ள அனைத்துப் பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கும் உதவும் நோக்குடன் இவர் ஊழுஆஏயுளுளு என்ற ஒரு அமைப்பினைத் தோற்றுவித்து அதன் மூலம் தொடர்ச்சியாக இன்றுவரை உதவி வருகிறார். இந்த ஊழுஆஏயுளுளு அமைப்பானது சிட்னி மாநகரிலே பாவனைக்குட்படுத்தப்பட்டு கைவிடப்பட்ட வெற்றுத் தகரப்பேணிகள், போத்தல்கள் என்பனவற்றை சேகரித்து வழங்குவதன்மூலம் ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தினை சேகரித்து அதன்மூலம் தாயகத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளுக்கு ஒவ்வொரு வருடமும் விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கி வருகின்றது.

இதனைத் தவிர இவர் தாயகத்திலே கல்வி கற்பதில் ஆர்வமுள்ள வசதி வாய்ப்பற்ற பிள்ளைகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பல உதவிகள் புரிந்து வருகிறார். தற்போது வரை 52 பிள்ளைகள் இவரிடம் இருந்து உதவிகள் பெற்று தமது கல்வியினை தொடர்ந்து வருகிறார்கள். இதில் பாலர் பிரிவிலிருந்து பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர் வரை உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தவிர தற்போது இவர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வறிய பாடசாலை மாணவர்களுக்காக 1000 துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வொன்றை ஒழுங்கு செய்துள்ளார். சுமார் 3 கோடி பெறுமதியான இந்த அன்பளிப்பானது இவரது மகனின் திருமண நிகழ்வினை யொட்டி நடைபெறவுள்ளது என்பது ஒரு விசேட அம்ச மாகும்.

இவரது கல்விக்கான தொண்டானது இலங்கையுடன் மட்டும் நின்று விடாது இந்தியாவில் தமிழகம் வரை பரந்து விரிந்துள்ளது என்பது இவரது பரந்த மனத்துக்கான இன்னொரு எடுத்துக்காட்டு. நாமும் வாழ்ந்து மற்றவரையும் வாழவைப்போம் என்ற இவரது கொள்கைக்கு இணங்க தமிழகத்திலே உள்ள புதுக்கோட்டை எனும் இடத்திலே வறுமைக்கோட்டிட்கு உட்பட்ட தமிழ் பட்டதாரி மாணவர்களுக்கு அரச வேலைக்கான பரீட்சைக்கு தயார்படுத்தல் வகுப்புக்களுக்காக கடந்த இரு வருடங்களாக மாதாந்தம் 20,000 இந்திய ரூபாய்களை இவர் நிதி உதவியாக அளித்து வருகிறார்.



இவ்வாறு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பல வகையிலும் உதவி புரிந்துவரும் இவர் அதற்கு அப்பால் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் தமிழ் மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வருகின்றார். தனது சொந்த ஊரான கோண்டாவிலில் உள்ள அனைத்துக் கோவில்களுக்கும் குறிப்பாக கோண்டாவில் காளி கோவில் மற்றும் இதர கோவில்களுக்கும் கடந்த பத்து ஆண்டுகளில் சுமார் 50 லட்சத்துக்கும் அதிகமான நிதி உதவியை அன்பளிப்புச் செய்துள்ளார். அத்துடன் பாடசாலை மாணவர்களின் ஆன்மிக வளர்ச்சிக்காக பாடசாலை வளாகங்களில் ஆலயங்களும் அமைத்து கொடுத்துள்ளார். இவரது தனிப்பட்ட நிதி உதவியினால் யாழ் இந்து ஆரம்ப பாடசாலை, கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயம் மற்றும் பூநகரி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் சிவாலயங்கள் அமையப்பெற்றுள்ளன. குறிப்பாக யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் பல இலட்சங்கள் பெறுமதியான பெரிய ஒரு சிவன் கோயிலை கட்டி மாணவர்களின் வழிபாட்டிற்காக தந்துள்ளார்.

இவரது ஆன்மீகத்தொண்டும் கல்வித்தொண்டைப் போன்று இந்தியாவின் தமிழகம் வரையிலும் விரிந்துள்ளது. தமிழகத்திலே திருநெல்வேலி நகரில் உள்ள பஞ்சமுக ஆஞ்சநேயர் கோவிலுக்கு ஒவ்வொரு வருடமும் 2 லட்சம் இந்தியா ரூபாய்களை இவர் அன்பளிப்பு செய்து வருகின்றார். இந்நிதியானது இத்திருக்கோயிலின் தொண்டுப் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைத் தவிர, தான் புலம்பெயர்ந்துள்ள ஒசுத்திரேலியா நாட்டிலும் இவரது தொண்டுப் பணிகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இங்கே இவரது உதவிகளானது தமிழர்களின் பண்பாடு மற்றும் கலை கலாச்சாரங்களை பாதுகாக்கவும் அதனை அடுத்த சந்ததிக்கு கொண்டுசெல்வதாகவும் அமையப்பெறும் நிகழ்வுகளுக்கு தங்கு தடையின்றிக் கிடைக்கின்றது. அத்துடன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினருக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளுக்கும் அவை சார்ந்த நிகழ்வுகளுக்குமான இவரது தொண்டுப்பணிகள் தொடர் கின்றன.

2020ம் ஆண்டு இவர் உடல் நலக்குறைவினால் பாதிப் புற்றிருந்தாலும் இறைவனின் கருணையினால் அதிலிருந்து மீண்டு வந்து தொடர்ந்தும் மக்கள் சேவையினை தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் மேற்கொண்டு வருகின்றார். இவர் தான் சந்திக்கும் அனைத்து அன்பர்களிடமும் சொல்லும் மந்திரம் “நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்போம்” என்பதாகும். இவ்வாறான நல்லெண்ணமும் மற்றவர்களுக்குத வும் பரந்த நோக்கமும் உடைய சிவத்திரு சுபதாசன் ஐயா அவர்கள் இந்த மண்ணில் சகல பேரின்பங்களும் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல ஐம்பூதநாதரை வேண்டி விண்ணப்பம் வைப்போம்.

அத்துடன் இவரின் குடும்ப வாழ்க்கைக்கும், சமூக வாழ்க்கைக்கு துணைநிற்கும் இவரின் துணிவியார் திருமதி. சித்திரா சுபதாசன் அவர்களும் இங்கு நினைவுகூரப் பட வேண்டியவர்.

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே**

சிவத்திரு.சஞ்சீவன் திருலோகநாதன்
சிட்னி

# சிவபூமியில் சிவனைத் தேடி - கல்முனை சந்தான ஈசுவரர் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள சிவாலயங்களுள் பிரசித்தி பெற்றது கல்முனை சந்தான ஈசுவரர் கோயில் ஆகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்கள் ஒன்றிணைந்து கல்முனை நகரில் தேரோடும் ஒரே ஒரு சிவன்கோயில் என்ற கீர்த்தியையும் பெற்றது.

### தல ஊர் வரலாறு

**“சீர்குலவும் ஈழவழ நாட்டின் கீழ்பால்**
**திருவெனவே நெல்விளையுங் கழனி நாப்பன்**
**ஏர்குலவ அறம் பயிலும் வணிகர் சான்றோர்**
**ஏழிலாருஞ் சைவநெறி ஏற்றங்காணக்**
**கார்குலவு கல்முனையூர்க் கவினார் கோயில்”**

என்று சந்தான ஈசுவரப் பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கும் கல்முனைதலவூரின் சிறப்புக்களை சந்தான ஈசுவரர் ஊஞ்சல் பாடலில் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள் பாடியிருக்கின்றார்.

அம்பாறை மாவட்டத்தில் புகழ்பூத்த புண்ணிய நகரான கல்முனை மட்டக்களப்பிற்குத் தெற்கே அக்கரைப்பற்று பிரதானவீதியில் 40கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. பூர்வீக காலத்தில் மட்டக்களப்பு தேசத்தோடு இணைந்திருந்த அம்பாறை மாவட்டம், 1961ஆம் ஆண்டுக்குப் பின்னர் தனித்தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டது. இருப்பினும் பூர்வீக காலத்தில் கிழக்கு மாகாணத் கரையோரப் பிரதேசங்களில் தமிழர் வாழ்ந்தமைக்கும், அங்கு நாகமன்னர்களின் ஆதிக்கம் நிலை கொண்டமைக்கும் ஆதாரங்கள் பல கிடைத்துள்ளன. காரைதீவு, திருக்கோயில், சங்குமன் கண்டி ஆகிய இடங்களில் கிடைத்துள்ள கற்சாசனங்களும், தொல்பொருட் சின்னங்களும் இதற்கு ஆதாரபூர்வங்கள் ஆகும்

**“கல்முனையில் தமிழர்”** எனும் நூலை எழுதிய எஸ். அரசரெத்தினம் கல்முனை என்ற பெயர் வந்தமைக்கான காரணத்தை மேல் வருமாறு குறிப்பிடுகின்றார். “படகு மூலம் மட்டக்களப்பின் தென்கிழக்கு கரையை அண்மிக்கும் போது கண்ணுக்குத் தெரிந்த நிலப்பகுதி ஒரு முனை போலவும், கற்பிட்டிகள் நிறைந்ததாகவும் தென்பட்டதனால் ஆரம்பத்தில் கண்டமுனை என்று அழைத்தனர். நாளடைவில் கண்டுமனை, கல்முனை என பெயர் பெற்றதாகவும், கி.பி 998-1030 வரையான காலப்பகுதியில் வரையப்பட்ட ஆவணங்களிலும், பிரித்தானியா வரைந்த இலங்கைப்படத்திலும் கல்முனை கண்டுமனை எனக் குறிக்கப்பட்டிருந்தது”.

### மூர்த்தி, தலம், தீர்த்தம்

**மூர்த்தி:- சந்தான ஈசுவரப் பெருமான்**
**இறைவன் கௌரி அம்மை இறைவி**
**தலவிருட்சம்:- அரசமரம்**

### தல வரலாறு

இன்றைக்கு எழுபது வருடங்களுக் முன்னர் யாழ்ப்பாண தேசத்திலிருந்து வாணிப நோக்கத்தோடு வருகை தந்த பலர் கல்முனை, பெரியநீலாவணை ஆகிய ஊர்களில் தங்கி வணிபம் செய்து வரும் காலத்தில், கல்முனையில் தங்கியிருந்த வர்த்தகர்கள் சாத்தான் கேணி குளக்கரையில் சிறு மேடான காணியை வாங்கியபோது பின் குளக்கரை ஓரமாக பழைய ஆலமரம் ஒன்றும் இருந்தது. அதன் அடியில் ஒரு கல்லை வைத்து வழிபாடு தொடங்கிய இடமே இன்று சாத்தான் கேணி சந்தான ஈசுவர ஆலயமாக வளர்ச்சி பெற்று சிறப்பு டன் விளங்குகின்றது.

1978 ஆம் ஆண்டு வீசிய சூறாவளியின்போது அங்கிருந்த ஆலமரம் அடி யோடு சரிந்து விழுந்தன் பின்பு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வசதி படைத்த வர்த்தகரான அருணாசலம் அவர்களின் தலைமையில் பக்தர்கள் யாவரும் ஒன்று கூடி புதிய ஆலயம் ஒன்றை அமைத்து 1980ஆம் ஆண்டு குட நன்னீராட்டு விழா நடைபெற்றது.

1997.03.17 அன்று காயத்திரி சித்தர் ஆர். கே. முருகேச சுவாமி அவர்களால் ஆகம விதிப்பிரகாரம் புதிய ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டதைத் தொடர்ந்து கட்டட சிற்ப அலங்கார வேலைப்பாடுகளும், சித்திர அலங்காரத்துடன் கூடிய கோயில் அமைக்கப்பட்டு, 2001.03.21 இல் குட நன்னீராட்டு விழா நடைபெற்றது. ஆலயத்தின் பரிகார தேவர்களாக விநாயகர், முருகன், சந்தான கோபாலர், சனீசுவரர், நவக்கிரகங்கள், ஆஞ்சநேயர், பைரவர், இலிங்கோற்பவ மூர்த்தி, தட்சனா மூர்த்தி ஆகியோரும் அருள்பாலிக் கின்றனர். மற்றும் ஆலயத்தின் அருகாமையில் பார்வதியம்மன் அன்னதான மண்டபம், சிவ துர்க்கை கல்யாண மண்டபம், தேர்நிறுத்தம் மண்டபம், என்பனவும் அமைந்துள்ளது தற்போது செல்வச் சன்நிதியின் ஆச்சிரம மேலாளர கலாநிதி மோகனதாஸ் சுவாமி அவர்களால் 58அடி உயரமுடைய இராச கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது

### மூர்த்தியின் கீர்த்தி

தற்போதைய ஆலயத் தலைவர் வே.செவ்வேள் ஆசிரியர் அவர்களின் செய்தியின் படி இங்கு எழுந்தருள் அருள்பாலிக்கும் மூர்த்தியின் அற்புதப் பெருமையை மேல்வருமாறு உரைத்துள்ளார். “கல்முனைக்கு வர்த்தக நோக்கத்திற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்கள் பெரும்பாலானவர்கள் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்கள் திருமால் வழிபாட்டில் ஈடுபாடும் பத்தியும் உடையவர்களாதலால் ஆரம்பத்தில் சந்தான கோபாலர் என்ற பெயரில் தான் ஆலயம் அமைக்கப்பட்டதாம்.1970 ஆம் ஆண்டு ஆலய மூல விக்கிரகம் தெல்லிப்பழையைச் சேர்ந்த பி.வேலாயுதப் பிள்ளை அவர்களால் யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டில் செய்யப்பட்டு எடுத்து வரப்பட்டது. பல ஆண்டுகளாக அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்த விக்கிரகம் நிலைப்படுத்தல் செய்வதற்காக எடுத்துவரப்பட்ட போது சந்தான கொபாலர் என்று கொண்டுவரப்பட்ட விக்கிரகம் சந்தான ஈஸ்வரராக மாற்றம் பெற்றிருந்தது. நாகத்தின் உள் கோபாலர் இருப்பதற்கு பதிலாக நாகத்தின் உள்ளே சிவலிங்கம் இருந்தது. இதனால் சந்தான கோபாலர் ஆலயம். சந்தான ஈஸ்வரர் ஆலயமாக மாற்றம் பெற்றது”

### பூசைகளும் விழாக்களும்

ஆலயத்தில் மூன்று வேளை நித்தியபூசைகள் இடம்பெற்று வருகின்றது, ஆலய வருடாந்த திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. கொடியேற்றம் முதல் மாம்பழத்திருவிழா, திருவிளக்குப் பூசை, பத்திமுத்தி திருவிழா, வேட்டைத்திருவிழா, திருக்கல்யாணம், சப்பறத்திருவிழா, தேர்த்திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும்.

இங்கு நடைபெறும் திருவிழாக்களில் “ ஊர் கூடித் தேர் இழுக்கும் தேர்த்திருவிழா” மிகவும் பிரசித்தம் வாய்ந்தது. 21 அடி 9 அங்குலம் உயரமுடைய அழகிய சித்திரத் தேர் கட்டப்பட்டு 2008 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டதைத் தொடர்ந்து, இன்றுவரை இரண்டு தேர்கள் கல்முனை மாநகரைச் சுற்றி கதவடி, கரகம், மயிலாட்டம், கோலாட்டம் முதலான கலையாட்டங்கள், மேளவாத்தியக் கச்சேரிகள் முழங்க. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ தேர்கள் வலம் வரும் நிகழ்வு கல்முனை நகரை



பத்தி விழாக் கோலமாகத் திகழ வைக்கிறது. இங்கு நடைபெறும் தேர்த்திருவிழாவிற்கு ஓர் சிறப்பும் உள்ளது அம்பாறை மாவட்டத்தில் தேர்ஓடும் முதற் சைவக்கோயில் என்ற பெருமையைப் பெற்று விளங்குகின்றது.


இவற்றை விட தைப்பொங்கல், தைப்பூசம், சித்திரை வருடப்பிறப்பு, ஆகிய தினங்களிலும் விசேட வழிபாடுகள் நடைபெறும், மற்றும் சிவன் இரவு, கழுவாய் வழிபாடு (பிரதோஷம்), திருவாதிரை, கேதார கௌரிவிரதம், ஒன்பானிரவு (நவராத்திரி) ஆகிய விரத வழிபாடுகளிலும் சிறப்புமிக்க பூசைகள் நடைபெற்று வருகின்றன.

இவ் ஆலயத்தின் மூர்த்தியின் மீது யாழ்ப்பாணம் மயிலம் கூடல் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களால் ஊஞ்சல் பதிகம் ஒன்றும் பாடப்பட்டுள்ளது.

**“கார் குலவு கல்முனையூர்க் கவினர் கோயில்**
**களித்துறையுஞ் சந்தான ஈசுவரர் மீ**
**துரலகு போற்றுவதோர் ஊஞ்சல் பாட**
**உயர் ஞானக் கிரிமுன்தான் காப்பதாமே”**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்



பேரூர் ஆதீன குருமகா சன்னிதானம் மற்றும் தர்மபுர ஆதீன திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தென்னாடு வருகை



பங்குனி நிறைமதி வழிபாடுகள்



பங்குனி கழுவாய் வழிபாடு



பூநகரி மத்திய கல்லூரி சங்கு நீராட்டு



தென்னாடு சைவ மாணவர்கள் - தென்னாடு சிவனடியார் திருக்கூட்டம்

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் பத்தொன்பதாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு மேழம் நல்லோரை சித்திரைத் திங்கள் 3ம் நாள் நிறைமதி அன்று (16-04-2022 சனிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 75 653 3111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org